ஐந்து நகரங்களில் அணிவகுப்பு!

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 2—7—1978 | இதழ் 43



கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

தொழிலாளர் முன்னேற்றச்சங்கப் பேரவையின் சார்பில் தொழிலாளர் பேரணி சென்னைமாநகரில் மிக்க எழுச்சியுடன் நடத்தப்பட்டு 25 6 78 அன்று ஆளுநரிடம் 'வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தை'த் திரும்பப் பெற வேண்டும்'' என்ற முறையீட்டை வலியுறுத்துகிற வேண்டுகோள் அளிக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்விரோதச் சட்டமாம் இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து முன்னேற்றச் சங்கப் பேரவை முழுமூச்சுடன் போராடுவது என்று எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்கது! வாழ்த்திப் பாராட்டத்தக்கது! பேரவை எடுக்கும் அறவழியிலான நடவடிக்கைகளுக்கு ஆங்காங்குள்ள கழக அமைப்புக்களும் துணை நிற்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளத் தேவையில்லை! ஏனெனில் கழக உறுப்பினர்களிலேயே பெரும் பகுதியினர் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

சென்னையில் நடைபெற்ற பேரணியைத் தொடர்ந்து அரசின் கவனத்தைக் கவர்ந்து தொழிலாளர் விரோத அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெற வைக்கிற வகையில் தமிழகத்தில் குறிப்பிட்ட நகரங்களில் பேரணிகளை நடத்த முன்னேற்றச் சங்கப் பேரவை ஆயத்தங்களைச் செய்து வருகிறது.

ஜூலை ஆறும் நாளன்று திருச்சியில் நடைபெறும் பேரணிக்கு; தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளர் காட்டூர் கோபால் அவர்கள் தலைமை தாங்குகிறார். நீண்ட நெடுங்காலமாகத் தொழிற்சங்க இயக்கத்தில் உழைத்து வரும் அவரது சீரிய தலைமையில் திருச்சி நகரத்தில் தொழிலாளர்கள் அணிதிரளப் போகிறார்கள். ஜூலை எட்டாம் நாள் பேரவையின் தலைவர் குப்புசாமி அவர்களின் தலைமையில் கோவையில் அணிவகுக்கின்றனர். தொழிலாளர்கள்! இவர் தொழிலாளர் நலனுக்காகப் பல்லாண்டுகளாகப் பணிபுரிபவர் — கோவை நகரத்தில் இவரது தலைமையில் குவிகிறது தொழிலாளர்சக்தி!

அடுத்து ஜூலை பத்தாம் நாள் தூத்துக்குடியில் மாநிலங்களவை உறுப்பினரும் தொழிற்சங்கங்களைக் கட்டி வளர்த்து வருபவருமான ஜி. இலட்சுமணன் அவர்களின் தலைமையில் பாட்டாளி வர்க்கம், அறப்போர்ப்பரணி பாடப் போகிறது. ஜூலை பதினோராம் நாள் தொழிலாளர்களின் எழுச்சிக்குரலாக ஒலிக்கும் கே. சுப்பு எம். எல். ஏ. அவர்களின் தலைமையில் மதுரை மாநகரில் தொழிலாளர்கள்பேரணி நடத்தி அறப்போர் முரசு கொட்டுவர்!

ஜூலை பன்னிரண்டாம் நாள் ஜி. பராங்குசம் அவர்களின் தலைமையில் தஞ்சையில் தொழிலாளர்கள் அணிவகுப்பர்' திராவிடர் இயக்கத்தில் தொடக்க காலந்தொட்டு தொழிற்சங்கத்தைக் கட்டிக்காத்துவரும் பெருமை பராங்குசத்திற்குஉண்டு, அண்மையில் தான் சிறையிலிருந்துவெளிவந்தார். அவரது தலைமையில் தஞ்சை நகர் குலுங்கிடப் பாட்டாளி வர்க்கத்தின் பவனி நடைபெறப்போகிறது.

ஐந்து நகரங்களில் கிளர்ந்தெழும் தொழிலாளர் வர்க்கம், தங்களுக்கெதிராகத் - தங்கள் உரிமைகளுக்கெதிராக — கோரப்பற்களைத் தீட்டிக் கொண்டு நிற்கும் அவசரச் சட்டத்தை இந்த அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று அமைதியான முறையில் வலியுறுத்தும்.

தொழிலாளர்களின் அறவழிக் கிளர்ச்சிகளை அலட்சியப்படுத்தக் கூடியவர் இன்றைய முதலமைச்சர் என்பதும் - ஆணவம் கொடி கட்டிப் பறக்கிற நிலையில் அவசரச் சட்டத்தின் காரணகர்த்தாவாக அவர் விளங்குகிறார் என்பதும்- தொழிலாளர் சமுதாயம் அறியாத உண்மை அல்ல!

தொழிலாளர் சமுதாயம் முழுமைக்கும் எதிரான ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துவிட்டு, நாங்கள்தான் தொழிலாளர்களின் நம்பிக்கைக்குரியவர்கள் என்று நாடாள்வோர் நாப்பறைகொட்டுவதும், அவர்களை நத்திக் கிடப்போர் நாவைச் சுருட்டிக் கொண்டு ஊமைகளாக உழல்வதும் — தமிழகத்தில் வேடிக்கையும் வேதனையும் கலந்த நிலையாகும்!

நமக்கு மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை; அவர்களை விமர்சிக்கத் தேவையுமில்லை - சந்தர்ப்பவாத அரசியல் இன்று இந்தியா முழுமையும் பரவிக் கிடக்கிறது என்றாலும். அதில் தமிழகம் சிறப்பானஇடத்தை வகிக்கிறது என்பதற்கு அவர்கள் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கிறார்கள்' அவர்களைத் தொழிலாளர்கள் அடையாளம் கண்டு கொள்ள நீண்ட நாட்களாகாது!

எனவே நமது கடமையை நாம் ஆற்றிடவேண்டும். எந்தக்கட்சிச் சார்புடைய தொழிற்சங்கங்கள் நடத்துகின்ற நியாயமான போராட்டங்களிலும் நாம்நமது ஆதரவை வழங்கத் தயங்கியதில்லை. அது கட்சிச் சார்பற்ற முறையில் தொழிலாளர் வர்க்கத்திற்காக நாம்ஏற்றுக்கொண்ட கொள்கை! நமது கழகச் சார்புடைய தொழிற்சங்க அமைப்பு ஒன்று உருவாகவேண்டுமென்று நாம் கொண்ட கருத்தும்தேவையின்பாற்பட்டதாகிவிட்டது — எந்தச்சூழ்நிலையிலும் தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளுக்காகப் போர்க்குரலை எழுப்பக்கூடிய பெரும் பாசறையாக இன்றைய தினம் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை திகழ்கிறது.

தொழிலாளர்களின் குரல்வளையை நெறித்த (தொடர்ச்சி 12-ம் பக்கம்)

அவசரச் சட்டம்; ஆகாது! கூடாது!

இதோ, ஒரு கோசாயி!

இருண்ட கண்டமான ஆப்பிரிக்காவின் ஒரு நாடே எகிப்து உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றான பிரமிடுகளைக் கொண்ட புகழார்ந்த நாடு. எகிப்து! நைல்நதியின் நன்கொடையாக எகிப்து, அவனி புகழ் அழகி கிளியோபாட்ராவை கொண்டிட்ட நாடு. வறண்டபாலைவனத்தில் வளமான விவசாயநிலங்களைக் கொண்ட நாடு.

அத்தகு வரலாற்றுப் புகழ் கொண்ட நாட்டை, 1798-ல் நெப்போலியன் வென்று தன தாக்கிக் கொண்டான் என்றாலும், 1802-ம் ஆண்டு அந்நாடு சுல்தான் வசம் ஒப்புவிக்கப்பட்டது. கேடிவி இஸ்மாயில் காலத்தில், பெரிதும் முன்னேற்றம் பெற்றது. அது போழ்துதான் வையகத்திற்கே பெருந்துணையான சூயஸ்-கால்வாய் பிரெஞ்சுக்காரர்களால் கட்டப்பட்டது. துருக்கியைத் தாக்குவதற்கு இங்கிலாந்து நாடு எகிப்தைக் களமாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்போர் முடிவுற்றதும் 1923-ம் ஆண்டு எகிப்து விடுதலை பெற்ற நாடாக விளம்பரம் செய்யப்பட்டது. பரூக் மன்னன் 1936-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் எகிப்தின் அரசியலளதேச்சாதிகார புயலாக மாறி மக்களை வாட்டியது. இதன் விளைவாக 1952-ம் ஆண்டில் எகிப்தில் அரசாட்சி முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

1953-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் எகிப்து குடியரசு நாடாக மாற்றப்பெற்று தளபதி நாசர் எகிப்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். இதை எகிப்தின் பொற்காலம் எனலாம். இத்தகைய எழிலான மாற்றத்தை எகிப்து பெறுவதற்கான இன்னல்களை எண்ணிப்பார்த்தால் இரும்பிதயங்கள் கூட கரைந்து விடும்.

எகிப்தை ஆண்டவர்களில் குறிப்பிடத்தக்கவன் அருன்-அல்-ரஷீத் என்பவனுவான். அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது.

'எனக்கு முன்னர் எகிப்தை ஆண்ட அரசன் மிகவும் தலைகனத்தவன். தானே ஆண்டவன் என்று கூறிக் கொண்டவன். அத்தகைய காவிக்கு தக்க பாடம் புகட்டுவதற்காகவே இந்த நாட்டைக் கைப்பற்றினேன். இதை நான் கூட ஆளப்போவதில்லை என்னுடைய அடிமைகளில் மிகவும் மடையனான ஒருவனை, ஆட்சிப்பொறுப்பில் அமர்த்தி அந்த அகம்பாவியின் அரியணைக்கு அவமானத்தை உண்டாக்கப்போகிறேன்'

அருள்வடிவு

என்று கூறியதோடல்லாமல், செய்தும் காட்டினான்.

அவனுடைய அடிமைகளில் மிகமிக மோசமான, நீக்ரோ இனத்தைச் சேர்ந்த அடிமை கோசாயி அவனிடம்தான் ரஷீத் ஆட்சிப் பொறுப்பை அளித்தான். அதனால். மக்கள் பட்ட துன்பம், அப்பப்பா! சொல்லிமுடியாது. படிக்காத பண்பற்ற-பழிவாங்கும்நோக்கமுள்ள, அனுபவம அற்ற, ஒரு முட்டாளின் ஆட்சியில் முன்னேற்றம்தான் முடியாது என்பது மட்டுமல்ல. அவன் ஆட்சியால் எத்தனை அல்லல்கள் விளையும் என்பதை, நமக்கு இன்றைய வரலாறு இயம்பிக் கொண்டிருக்கிறது. அவன் ஆட்சியின் அலங்கோலத்திற்கு ஒரு உதாரணம் இதோ!

ஒரு சமயம் எகிப்து நாட்டு விவசாயிகள் சிலர் கோசாமியைக் கண்டு,

'அரசே, நைல் நதியின் படுகைகளில் பருத்தி சாகுபடி செய்தோம். அகால மழையினால் பயிர்கள் அடியோடு நாசமாகிவிட்டன. தாங்கள் தான் எங்களுக்கு உண்டான துன்பத்தைத் துடைத்துத் துணை புரியவேண்டும்.'

என்று குறையைக் கூறி முறையிட்டனர். அதற்கு அவன் திரைப்பட வசனம் ஒப்புவிக்கும் நடிகனைப்போல் தன்னை நினைத்துக்கொண்டு, வேதனையோடு வந்த விவசாயிகளை கோபாவேசத்தோடு நோக்கி,

'என்ன பருத்தி பாழாய் போயிற்று? போவட்டுமே, உங்கள் தலைமயிரில்லை! தலைமயிரை நட்டு பயிர் செய்வதற்கென்ன?'

என்று தத்துவமொழி உதிர்த்து, வயிறெரிந்து வந்த விவசாயிகளை அடித்து விரட்டினான். இந்த சம்பவத்தை கேள்வியுற்ற நாடு புகழ் தலைவன் ஒருவன் கூறியது இன்னும் பொருத்தமாக உள்ளது எனலாம்.

"இவ்வுலகம் தோன்றியது முதலே இவ்வாறுதான் சூழ்நிலை நிலவி வருகிறது. முழுமூட மந்திகளெல்லாம் (மாந்தரெல்லாம) அறிவிற்சிறந்த மக்களைக் கீழே தள்ளிவிட்டுப் பெரிய பதவிகளைப் பிடித்துக் கொள்வது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அறிஞர் பெருமக்கள் பசியாலும், பஞ்சத்தாலும், குளிரின் கொடுமையாலும் மனமொடிந்து வருந்தும் நேரத்தில் மதிகெட்டவர்கள் அறிவின் மந்திபில பொன்னையும், பொருளையும் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றி எக்காளமிடுகின்றனர்"

என்றவன் கூறிய மொழியை, நெஞ்சிற்கொண்டு, இப்பொழுது ஆளும் ஆளவந்தார்களைச் சுட்டிக்காட்டி இதோ ஒரு கோசாயி' என்று கூறினால் மிகையாகுமா?

கம்யூனிச 'ஜனநாயகம்!'

'சிவப்பு' நாடுகளில் தேர்தல் என்பது ஒரு கண்துடைப்பு வேலையே என்று பலர் கூறுவதில் உண்மை இல்லாமலில்லை!

எடுத்துக்காட்டாக—யூகோசுலாவியா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக—சாதும்வரை—அந்நாட்டுக் குடியரசுத் தலைவரான டிட்டோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்!

'ஏகமனதாக' அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் எனச் சொல்லப்படுகிறது; கம்யூனிஸ்ட் கட்சியில் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதென்றால் என்னவென்று எல்லோருக்கும் தெரியும்!

யூகோசுலாவியா கம்யூனிஸ்ட் கட்சிக்குக் 'கூட்டுத் தலைமை' ஏற்படுத்துவதென்று ஒரு தீர்மானம் உள்ளது—அதுவுங்கூட டிட்டோவின் மரணத்திற்குப் பிறகுதான்!

சாகும்வரை மன்னராக இருக்கும் முடியாட்சி முறைக்கும் ஆயுட்காலத் 'தலைவராகத் தேர்ந்தெடுக்கும் இந்த முறைக்கும் இடையே எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லையே

பொதுவுடமை இயக்கப் பகுத்தறிவாளர் மறைவு

ஏ. எஸ். கே.—சாதிகளை வேரறுக்காது பொருளாதார சமத்துவத்தை உருவாக்குவது இயலாது என்ற பெரியாரின் கருத்தில் முழு உடன்பாடுகொண்டவர்; தொழிற்சங்கத் தலைவராக நெடுங்காலம் பணியாற்றி வந்தவர்; இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (வலது) முதுபெருந் தலைவர்களில் ஒருவர்; சிறந்த இலக்கியவாதி; பெரியார் பற்றி அவர் எழுதிய "பகுத்தறிவின் சிகரம் பெரியார் ஈ. வெ. ரா." என்ற புத்தகமும், 'தங்கம்மா' என்ற புரட்சிகரமான நாவலும் புகழ் பெற்றவைகள்.

இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டால் பொதுத் தொண்டிற்காக முழு நேரத்தையும் செலவிட இயலாது என்பதற்காகத் திருமணமே செய்துகொள்ளாதிருந்தவர்.

அவருடைய மறைவு தொழிலாளர் வர்க்கத்திற்கும், பகுத்தறிவு இயக்கத்திற்கும் ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

வந்த மடல்

ஐயா.

தேன் சிந்தும் மலரில்—வண்டுகள் திளைப்பதைப் போல 'நம்நாடு' இதழைக் கண்ணுற்றதும், செந்தமிழ்ச் தீஞ்சுவையில் உள்ளம் கட்டுண்டு விடுகிறது!

கருத்துக் கருவூலமாம்-கலைஞரின் சிறு கதையும், காக்கப்படவேண்டிய காலப் பெட்டகம் போன்ற கடிதமும்; வரலாற்றை — படம் பிடித்துக்காட்டும் -கட்டுரைகளும், தமிழரின் மொழிக்கும்-விழிப்புணர்ச்சிக்கும், பாதுகாப்புக் கவசமென அணி செய்கின்றன!

சிறு கவிதைகள், அறிஞர் அண்ணாவின்—பொன்மொழிகள்—துணுக்குகள் முகப்பில் அரசியல் கேலிச்சித்திரமும் இடம் பெற்றால் 'நம்நாடு இதழ் கலைக் களஞ்சியமாகவும் மிளிரும்!

நீலகிரி மலையில் நான் வாழும் சிற்றூரில் ஒரு இதழில் ஆரம்பித்து, இன்று நூறு பிரதிகளுக்கு மேல் விற்பனை செய்து வருகிறேன். இன்னும் வளரும்—தொடரும். நான் 'நம் நாடு' இதழை வினியோகிக்கச் செல்லும்போது வாடிக்கையாளர்கள் இந்த எளியோனை வரவேற்கும் ஆர்வமும், அவசரமும், அம்மவோ...! என் உடல் புல்லரிக்கிறது!

ஒவ்வொரு 'நம்நாடு' இதழும் கலைஞர் தமிழன்னைக்குச் சூட்டும் 'மணிமகுடமாகத்' திகழ்கிறது!

தொண்டன்.
வி அரங்கசாமி
குந்தா—நீலகிரி

★★★★★★★★★★ ★★

ஜனதாவின் 'உள்கட்சி' ஜனநாயகம்!

"அண்ணே ....."

"என்ன தம்பி?"

"கட்சிக் கட்டுப்பாட்டை மீறுனதுக்காக ராஜ்நாராயணன் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏன் எடுக்கக்கூடாதுன்னு கேட்டு ஜனதா கட்சி தலைவர் சந்திரசேகர் அவருக்கு நோட்டீஸ் விட்டிருக்கிறாராமே......"

'ஆமா, தம்பி......"

"ராஜ்நாராயணன் விளக்கம்கொடுத்தாரா அண்ணே?"

"இல்லே தம்பி..... தன்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததுக்கு விளக்கம் கேட்டு பதில் நோட்டீஸ் விட்டுருக்காராம்..... !!"

சரண்சிங் "போட்டி ஜனதா கட்சி" ஆரம்பிக்கப் போறார்னு சொல்றாங்களே அண்ணே, உண்மையா இருக்குமா?"

"அரசியல்ல எதுவேணும்னாலும் நடக்கலாம் தம்பி.."

"ஏண்ணே இப்படி ஜனதா கட்சிக்குள்ளே 'குடுமி பிடி சண்டை போட்டுக்கிட்டிருக்காங்க?"

"எனக்குத் தெரியாது தம்பி.. அவங்களைக் கேட்டா இதுதான் 'உட்கட்சி ஜனநாயகம்னு சொல்றாங்க..."

★★★★★★★ ★★★★

தென்சென்னை 'நம்நாடு' விற்பனையாளர்

தென்சென்னைப் பகுதிக்கு நம்நாடு விற்பனையாளராக திரு டி. துரைராஜ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் முகவரி.

டி. துரைராஜ்
57 அப்பா முதலி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

ஏஜெண்டுகள் கவனிக்க

பில் பணத்தை உடனடியாக ஏஜெண்டுகள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பணம் அனுப்பாதவர்களுக்குப் பிரதிகள் அனுப்புவது நிறுத்தப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி
'நம்நாடு'

பொய்மைக்குக் காவலர்!

'பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடைக்காது' என்பது, ஒரு பழமொழி வளரும் மோசடி உலகில் இன்று அது ஒரு சொத்தை வாசகம். 'பொய் சொல்லா வாய்க்குப் போசனம் கிடைக்காது' என்பதே, இன்று வாழத் தெரிந்தவர் கைக்கொள்ளும் நீதி நெறி!

அதுவும் அரசியல் உலகில், 'வாய்மையே வெல்லும் என்பதைத் தம் இலச்சினையில் பொறித்துள்ள இந்தியத் திருநாட்டில், வாய்மைக்கு உள்ள வாய்ப்பு நாள்தோறும் அருகி வருவதே, நாம் அன்றாடும் கண்டு வரும் காட்சி ஆகிவிட்டிருக்கிறது!

அண்ணாவின் உயரிய கோட்பாடுகளை, 'அண்ணாயிசத்தில் அமுக்கி விட்டதைப்போலவே வாய்மையை இந்த நாட்டு முத்திரையில் புதைத்து விட்டுப் பொய்மைக்கு அரியாசனம் கொடுத்துக் கொலுவிருப்பது நம் தமிழக ஆட்சி! சத்தியத்தாயின் தவப் புதல்வர் ஆட்சியல்லவா?

பொய் பேசுவதுதான் தவறு, பொய் வழக்குப்போடுவது தவறு அல்ல என்று ஒருவேளை நம்மை ஆள்வோர் வாதிடவும் கூடும்!

'வழக்குப் பொய் என்றால் அதை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டியதுதானே என அவர்கள் அடிக்கடிப் பேசுவதைப் பார்த்தால், ஆட்சியாளர் பொய் வழக்குப்போடுவதில் தப்பில்லை பாதிக்கப்படுவோர்க்குத் தெம்பிருந்தால் தம்மை நீதிமன்றத்திலே தற்காத்துக் கொள்ளட்டும்' என்பதே இன்றை ஆட்சியாளர் படைத்துவரும் புதிய தத்துவம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது!

குடிமகனைக் காக்கும் பொறுப்பிலே உள்ள ஓர் அரசு அவன் மீது வழக்குப் போடுவது, அதுவும் பொய் என்று தெரிந்தே அவனை நீதிமன்றத்தில் நிறுத்துவது. இதுவரை நாம் கண்டிராத ஒரு புரட்சிகரமான நடைமுறையே என்பதில் சந்தேகமில்லை'

'தமதாட்சியை நிலைநிறுத்த எதையும் செய்யலாம் என்பதைச் 'சரி' என்று ஓரளவுக்கு அரசியல் சதுரங்கத்தில் ஒத்துக் கொள்ளும் அரசியல் வாதிகளுங்கூட, இன்று தமிழகத்தில் தி. மு. க. கழகத்தவருக்கெதிராக அரசு செய்யும் பொய்ப் புனைவுகள் வரம்பு மீறியவை என்பதை மறுக்க மாட்டார்கள்!

இந்த நாட்டு மக்களுக்குச் சில நியாயங்கள் தெரியவேண்டும் என்பதற்காக, ஒரு சில உண்மைகளை நினைவுபடுத்துவது எந்த வழக்கையும் பாதிக்காது என்று நம்புகிறேன். எளிதில் புரியும் வண்ணம் அவை கேள்விகள் வடிவில் தரப்படுகின்றன. ஒரு நூறு பிரச்னைகள் கிளப்பப்படலாம் என்றாலும் மாதிரிக்காக ஒரு பத்துக் கேள்விகள் மட்டுமே இங்கே எழுப்பப் படுகின்றன!

1. 1972-ல் புனையப்பட்ட குற்றச்சாட்டுகள், 1976-ஆம் ஆண்டில் விசாரணைக்கு வந்தனவே அதுவரை அவை என்ன செய்து கொண்டுஇருந்தன?

2 கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில்பாதியளவுக்கு விசாரியாமல் விடப்பட்டனவே, அதன் மர்மம் என்ன?

3. குற்றம் சாட்டியோரை அதற்கு ஆளானோர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி மறுக்கப்பட்டதே, அது ஏன்?

4. தான் குற்றமற்றவன் என்பதை மெய்ப்பிக்கத்தான் விரும்பும் பல சாட்சியங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதே. அது எதனால்?

5. நீதி செத்துக்கிடந்த நெருக்கடிக் காலத்தில்—அரசு சொல்வதை எவரும் தட்ட முடியாமல் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்ற சூழ்நிலையில் சோடிக்கப்பட்ட சாட்சியங்களைக் கொண்டு —ஒருதலைப்பட்சமாக விசாரணை நடத்தப்பட்ட பின்னரும் வெளிவந்திருக்கிற சர்க்காரியா முடிவுகள் எதுவும் (தீர்ப்புகள் அல்ல!) கழகத்தலைவர் கலைஞரை நேரடியாகக் குற்றவாளி என்று சொல்லக் கூசுகிறதே. அது எதைக் காட்டுகிறது?

6. 76-ஆம் ஆண்டு துவக்கத்தில் ராசேந்திரன் மீது நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு தாக்குதலுக்கு 78-ஆம் ஆண்டு மத்தியில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப் படுகிறதே, அதற்கு என்ன காரணம்?

7. நெருக்கடிக் காலத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் இந்தச் சம்பவத்திற்கு 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற பெருமைக்குரிய அன்னையால் தாக்கல் செய்யப்படாத குற்றப் பத்திரிகை. 'அவனே எல்லாம்' என்ற பெருமைக் குரிய ஐயனால் தாக்கல் செய்யப்படுகிறதே, அப்படியானால் அன்னையைவிட ஐயனுக்கு நீதியின் மீது மோகம் அதிகம் என்பது அதன் பொருளா? அல்லது, அநீதியைச் செய்ய அன்னைக்கு இருந்த சிறிது நாணமும் ஐயனுக்கு இல்லை என்பது அதன் பொருளா?

8; முதல் தகவல் அறிக்கையின் போது வெறுமனே ஒரு முன்னாள் நடிகராக இருந்த, தாக்குதலுக்கு ஆளானதாகச் சொல்லப்படும் நபர், குற்றப்பத்திரிகை தாக்கலாகும்போது மாநிலத்தின் சிறு சேமிப்புத் துறைக்குத் துணைத் தலைவராக இருக்கிறாரே, அது எப்படி?

தாக்குதலுக்கு ஆளானவர் ஆயிற்றே என்ற பச்சாதாபத்தால் தரப்பட்டதா? அல்லது, பதவி கொடுத்தால்தான் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய ஒத்துழைப்பேன் என அவர் 'முரண்டு' பிடித்தாரா?

9. பட்டப்பகலில், நட்ட நடு வீதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில், இந்திரா காந்தியைக் கொலைசெய்யச் சதி செய்ததாகக் கலைஞர் மற்றும் 135 கழகத்தவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதே. இப்படியொரு கொலை முயற்சி விநோதம் உலகில் வேறெங்கும் இதற்குமுன் நடந்ததுண்டா?

10. இந்த வழக்கில், சக்தி வாய்ந்த ஓர் அரசுக்குச் சாதகமாகச் சத்தியப் பிரமாணத்தோடு ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதற்கு, ஓர் ஆள் கிடைக்க எட்டு மாதங்கள் ஆகியுள்ளனவே அதற்குஎன்ன காரணம்?

அதுவும் நாடாளுமன்றம் சட்டமன்றம் இரண்டுக்குமே வேட்பாளராக நின்று பார்த்துத் தோல்வியடைந்த ஒருவர் மாநிலங்களவைக்கு வாய்ப்புத் தரும்படிக் கேட்டு அதுவும் கிட்டாதநிலையில்—ஏற்கனவே தாம் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டதற்கு, என்றாவது ஒரு நாள் கலைஞர் மீது பழிதீர்த்துக்கொள்ள வேண்டும் என்று பொருமிக் கொண்டிருந்த ஒருவர்— இப்போது வாக்குமூலம் அளித்துள்ளாரே, காலங் கடந்து அவருக்கு உண்மையின் மீது ஏற்பட்டுவிட்ட இந்தக் காதல், காரணமின்றி ஏற்பட்டது தானா? அல்லது, கருத்தோடு பிழைக்க வேண்டும் என்ற கவலையால் விளைந்த மாற்றமா?

செகந்தப்பன்

இந்தப் பத்துக் கேள்விகளும் பதில் தர முடியாத வினாக்கள் அல்ல; சட்ட நுணுக்கத்தோடு எழுப்பப்பட்டவையும் அல்ல; பொது நிலையில் சராசரி மனிதனுக்கு தோன்றக் கூடிய ஐயப்பாடுகளே இவை.

இந்தச் சந்தேகங்களுக்கு எதிராகச் சட்டத்தைப் பேச வைக்க ஒருக்கால் அரசால் முடியலாம. ஏனெனில் சட்டத்தை நியாயங்களுக்குப் புறம்பாகவும் பேச வைக்க முடியும்! ஆனால் பகுத்தறிவுக்கு ஏற்ற விளக்கத்தை— அறிவுலகம் ஏற்கும் வண்ணம்-தருவதற்கு ஆளவந்தாரால் நிச்சயம் முடியாது

அவர்கள் பொய்யிலே ஜனித்து, பொய்மையையே போற்றி, அதனையே நிலைநாட்டப் பாடுபடும் பொய்க் காப்பாளர்கள் என்பது இன்று இந்த நாட்டுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது!

என்றாலும், 'நீதிமன்றத்தில் நீ குற்றமற்றவன் என்பதை மெய்ப்பித்துக்காட்டு என்பது மேலோட்டமாகப்பார்த்தால் ஒரு சத்துள்ள வாதமாகவே பொதுமக்கள் கண்ணுக்குத் தோன்றும், அதுவும் ஆளவந்தார்க்கு நெருக்கமாகவுள்ள பொதுமக்கள், நிச்சயம் இந்த வாதத்தால் ஏமாறவும் மயங்கவும் செய்வர் என்பதைப் புரிந்தேபொறுப்பு வாய்ந்த(?) அமைச்சர்களுக்கும் இதனை விடாப்பிடியாகப் பேசி வருகின்றனர்!

ஆனால் நீதியை வழங்குவது தான் நீதிமன்றம்: அந்த நீதிமன்றத்தையும் சேர்த்துப் பரிபாலிப்பதோ ஆட்சி மன்றமாக அல்லவா உள்ளது?

மக்களின் வளவாழ்வுக்கு மட்டுமல்லாமல், அவர் தம் பாதுகாப்பிற்கும் காவலிருக்கும் கடப்பாடு உடையது அரசு அந்த வேலியே பயிரை மேய்வதும், 'உனக்குப் பாதுகாப்பை நீ அறங்கூறும் அவையத்தில் பெற்றுக்கொள் என்பதும் புரட்சியார் ஆட்சியின் மட்டுமே நடக்கக்கூடியபுதுமைகள்!

பரிபாலிப்பவனே பாவியானால் நீதி எப்படி நிலைநிற்கும்? பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்றான் பாரதி.

சாத்திரங்களுக்கே அந்தகதி என்றால், சட்டம் எம்மாத்திரம்?

★★★★★★★★-★★★★

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00

ஆறுமாத சந்தா ரூ. 12.50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★★★-★★★★★★

இதுவா ஐயா - அண்ணா வழி?

தமிழ்நாடு அரசு இவ்வாண்டு திடீரென்று பொறியியல் கல்லூரியில் சேர்வதற்கான மதிப்பெண் வரம்பினை60 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதமாக உயர்த்தியுள்ளது. இது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும்.

இதுபோன்றே 'பாலிடெக்னிக்கு'களில் கூட மதிப்பெண் அடிப்படையில்தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்ற செய்தி மிகவும் வருத்தம் தருவதாக உள்ளது. இன்றைய தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சர் ஓர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தும் (பிற்படுத்தப்பட்ட) மாணவர்களின் கல்வி விஷயத்தில் மதிப்பெண் தகுதியினையும் திறமையினையும் திடீரென்று புகுத்துவது வேதனைக்குரியதாகும்.

பொறியியல் கல்லூரி மற்றும் 'பாலிடெக்னிக்கு'களில் மாணவர்களைச் சேர்க்கும் போது அவர்களின் குடும்பச் சூழ்நிலையினையும் அரசு நோக்க வேண்டும். இதைப்பற்றிச் சிறிதளவும் கவலை கொள்ளாது அ. தி. மு. க. அரசு இருக்குமேயானால், பிற்படுத்தப்பட்ட மக்களை இவ்வரசு புறக்கணிக்கிறது என்பது தான் பொருள்.

'ஐயாவழி' 'அண்ணாவழி' என்று பேசிக் கொண்டே மனம் போன போக்கில் மதிப்பெண்களை உயர்த்திக் கொண்டே போவது பிற்படுத்தப்பட்டோருக்குச் செய்யும் அநீதியாகும்!

—[illegible] பால்ராஜ், காரைக்குடி

'யோகி'கள் - 'பாபா'க்கள் - 'சுவாமிஜீ'க்கள் - ஒரு படப்பிடிப்பு!

> 'இருண்ட மனம்' படைத்த 'சுவாமி'களின் இன்றைய நடவடிக்கைகளைக் கண்டு வருத்தமடையாமல் இருக்கமுடியாது ... அண்மையில், இந்தப் புனிதமான இடத்தில் (ரிஷிகேசத்தில்) என்னென்ன 'அக்கிரமங்கள்' நடக்கின்றன என்பதை விவரித்துக்கூறும் அறிக்கை ஒன்றைப் படித்து என் இதயம் அழுதது... துறவிகள் என்று சொல்லிக்கொள்ளும் இந்தப் 'போலிகள்' செய்யும் பாவங்களுக்கு ஒரு எல்லையே இல்லை.
>
> — மகாத்மா காந்தி
> ('யங் இந்தியா' 6 10.'29)

ஆம்—மகான்கள் என்ற பெயரால் ஊரை ஏமாற்றும் எத்தர்களின் செயல்கண்டு ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே அழாக்குறையாகத் தம்முடைய பத்திரிகையில் (யங் இண்டியா) எழுதியுள்ளார் மகாத்மா காந்தி.

'யோகி'கள்—'பாபா'க்கள்-'சுவாமிஜீக்கள்'—என்ற பெயரால் நாள்தோறும் இன்று இந்தியாவில் 'அயோக்கிய சிகாமணிகள் பெருகி வருகின்றனர்கள்; நல்ல வேளை—மகாத்மா காந்தி உயிரோடு இல்லை.—இருந்திருந்தால் நெஞ்சு வெடித்து மாண்டிருப்பார்! அவர் உயிர்போக்க ஒரு கோட்சே தேவைப்பட்டிருக்க மாட்டான்!

ரிஷிகேஷ்! இமயத்தின் வாயிற கதவு, ஹரித்வார் சாலையிலிருக்கும் இது உலகப் புகழ்பெற்ற 'புண்ணிய ஸ்தலம்!' கோடையிலும் வற்றாத நதியான கங்கை இங்கே விளையாடிச் செல்கிறது. வெண்பனிச் சிகரங்கள் இதன் பின்னே தலைநிமிர்ந்து நிற்கின்றன.

அயல்நாட்டிலிருந்து. அல்லது இந்தியாவின் பிறமாநிலங்களிலிருந்து வரும் (ஏராளமான பணத்தைச் செலவழித்துக் கொண்டு) 'பக்தர்கள் ரிஷிகேசத்திலிருக்கும் கோயில்கள், ஆசிரமங்கள், தர்ம இல்லங்கள் ஆகியவற்றைக் கண்டும், அவைகளில் ஓதப்படும் மந்திரங்கள், செய்யப்படும் பூஜைகள், ஜெபிக்கபடும் வேதங்கள் — ஆகியவற்றைக் கேட்டும் 'பக்திப் பரவசத்தால்' கரைந்துருகிப் போகலாம்... ஆனால் —

இருண்ட பிறகும், யாரும் காணாதபோதும் அந்தப் 'புனித இடங்களின் சுவர்களுக்குள்ளே நடக்கும் 'சட்ட விரோதச் செயல்களைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டால் யாருக்கும் 'பக்திப் பரவசம்' ஏற்படாது! மாறாக — மின்சாரத் தாக்குதல் போல அதிர்ச்சிதான் ஏற்படும்!

ரிஷிகேசத்திலிருக்கும் பெரும்பான்மையான 'துறவிகள்' தங்கத்தைக் கடத்துவதிலும், அந்நியச் செலாவணி மோசடி செய்வதிலும் கைதேர்ந்தவர்கள்' என அவ்வப்போது அரசுக்குக் கிடைக்கும் தகவல்கள் சொல்கின்றன.

'சமயச் சொற்பொழிவுகள்' ஆற்றுவதற்கும், 'இந்துப் பண்பாட்டைப் பரப்புவதற்கும்' என்று சொல்லிக் கொண்டு அயல் நாடுகளுக்குப் பறந்து போகும் பெரும்பான்மையான 'யோகிகள்'—'பாபா'க்கள் — 'சுவாமிஜீக்களின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்குரியனவாகவே உள்ளன.

பெரும்பான்மையான ஆசிரமங்கள் வேதங்களையும், யோகங்களையும் கற்றுத் தருவதோடு நின்று விடவில்லை; அயல்நாட்டு ஒற்றர்களின் அலுவலகங்களாகவும் செயல்பட்டு வருகின்றன!

நகராட்சி அதிகாரியின் கணக்குப்படி முப்பத்திரண்டு ஆசிரமங்கள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் மதப் பிரச்சாரத்திற்காகச் செயல்படும் ஆசிரமங்கள்—ஏழு தான்!

தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டு வரும் ஆசிரமங்களில் மிகப் பிரபலமானது மகேஷ் யோகியின் ஆசிரமம் தான். மகேஷ் யோகி, வெளிநாட்டினரை மட்டும்தான் தமது ஆசிரமத்திற்குள் அனுமதிப்பார்!

பழனி. சித்தார்த்தன்

1965–1966-ம் ஆண்டு வாக்கில் அமெரிக்காவின் உளவுத் துறை (C, I A.) ஓர் உளவு பார்க்கும் கருவியை 'நந்தா தேவி' மலைச் சிகரத்தில் ஒளித்து வைத்தது; (அது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் மிகுந்த சர்ச்சை எழுந்தது நினைவிருக்கலாம்.)

'நந்தாதேவி'யில் அமெரிக்காவின் உளவுத்துறை உளவுக் கருவியை ஒளித்து வைக்க 'மகேஷ்யோகி மிகவும் உதவி செய்தார் என இப்போது சொல்லப்படுகிறது.

மகேஷ்யோகியின் சௌரசி குட்டியா' ஆசிரமம் எண்பத்து நான்கு அறைகள் கொண்டது. அவருடைய சீடர்களில் பெரும்பான்மையானோர் அயல் நாட்டவர்களே! சகலவிதமான சொகுசு வசதிகளும் கொண்ட ஆசிரமத்தில் அவர்கள் வந்து தங்குவதன் நோக்கம் மர்மமாகவே இருக்கிறது. 'வேதங்கள்' பயில்வதற்காக என்று சொல்லிக் கொண்டு, திரைமறைவில் அவர்கள் செய்யும் காரியங்கள் இந்தியப் பொருளாதாரத்திற்கு ஊறுவிளைவிப்பதாகவும், பாதுகாப்புக்குக் கேடு செய்வதாகவும் இருக்குமோ என அஞ்சப்படுகிறது. மகேஷ் தன்னுடைய

(8-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு நமது 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

காஞ்சிபுரம
திருப்புவனம்
புலவன்காடு
பெரம்பலூர்
ஆத்தூர் (மதுரை மாவட்டம்)
விருகம்பாக்கம் (சென்னை)
திருவாரூர்
ஸ்ரீரங்கம்
நீடாமங்கலம் (தஞ்சை)
புதுக்கோட்டை

நிர்வாகி.
நம் நாடு.
அன்பகம், சென்னை-600018

'கோயில்' முதலாளிகள்!

இன்று இந்தியாவில் அதிக வருமானம் ஈட்டுவன எவை தெரியுமா? கோயில்கள் தாம்! பெரும்பான்மையான கோயில்கள் ஆண்டொன்றுக்கு- செலவெல்லாம் போக- இலட்ச ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கின்றன.

ஆண்டொன்றுக்கு சில ஆயிரம் ரூபாய் வருமானம் காட்டி, பொய்க் கணக்கு எழுதிய கோயில் ஒன்றை அண்மையில் அரசு தன் கீழ்க் கொண்டு வந்தது- இங்கல்ல, பம்பாயில்!

பம்பாயின் இன்னொரு பெரிய கோயிலின் அர்ச்சகர் ஒருவரின் வீட்டை வருமானவரி அதிகாரிகள் சோதனை இட்டபோது மூன்று இலட்ச ரூபாய் ரொக்கமாகவும், ஏறத்தாழ இரண்டாயிரம் நகைகளையும் (பல்வேறு வடிவில் செய்யப்பட்டவை) கைப்பற்றினார்கள்.

கமான்! கமான்!!

தமிழ்நாடு சட்டமன்றத்தில், கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள், பல்வேறு புகைப்படங்களுடன். பரபரப்பான குற்றச் சாட்டுக்களைத் தெரிவித்தார்.

அமைச்சர் சரசுவதியின் தாயார்!
அரசு கார்!
செக்யூரிட்டி ஆபீசர்!
குதிரைப் பந்தய மைதானம்!
சட்டமன்றமே, கலங்கியது!

இதன் விளைவு-இதனால் நாட்டு மக்களுக்குக் கிடைத்த பரிசு- என்ன தெரியுமா?

குதிரைப் பந்தயத்தை அரசே ஏற்று நடத்தும்!

முதலமைச்சரின் கொள்கைப் பிரகடனம் இது!

குதிரைப் பந்தயத்தின் சூதாட்டக் கொடுமையை எண்ணி, எண்ணி மனம் நொந்த பேரறிஞர் அண்ணாவின் இதயப் புண்ணை ஆற்றிடும் வகையில் குதிரைப் பந்தயத்தை ஒழித்துக்கட்ட, கலைஞர் வரிந்து கட்டினார்.

ஆனால் இந்த அரசோ, அண்ணா வழியில் வந்த அரசல்லவா?

இதைவிட அண்ணாவுக்கு வேறென்ன துரோகம் செய்யவேண்டும்!

இப்பொழுதாவது மக்களுக்குப் புரிகிறதா?

அமைச்சரவையை விரிவு படுத்தியதன் மர்மம்?

பதினெட்டு— அமைச்சர்கள், எட்டு— செயலர்கள்.

இவர்கட்கு இனி என்ன வேலை தெரியுமா?

இனிப்பந்தய மைதானத்தில் இருபத்தாறு குதிரைகள் ஓடும்!

அவையாவும் அரசுக் குதிரைகள் அல்லவா?

சுபத்ரா, எங்ஆம்பரர் குயின்ஸ்யெலோடி, லிட்டில் பிளவர், ரம்மியன்ஷோ, ஈவன்டைம் டயனோரா இப்படிப்பட்ட, எந்தக் குதிரைகளானாலும், இனி அமைச்சர்களையே, ஜாக்கிகளாக— ஏற்றிக் கொண்டு ஓடினாலும் ஓடும்!

இனி ரசிகர்களுக்கு வேட்டைதான்,
இதோ,
எம். ஜி ஆர். — எம். ஜி ஆர்,
கமான்! கமான்!
இல்லை! இல்லை!
ராகவானந்தம்
கமான்! கமான்!
சபாஷ் ஐசரிவேலன் — முசிறிபுத்தன்
கமான்! கமான்!
கோட்டையிலே குதிரை ஓடும் நாளே— தமிழரின் திருநாள்! இதுவே அண்ணாயிசம்!

·வெற்றிகொண்டான்

புருஷன்

தென்னரசு

7

வாழ்க்கை என்பது பெரும் பயணம்தான். ஆனால் அது வட்டவடிவமான பயணம். கடலில்சஞ்சரித்துக்கொண்டே இருந்தால் புறப்பட்ட இடத்தையே வந்தடைந்துவிடலாம் என்பது பூமி நூல் சூத்திரம். உண்மையும் அதுதான். அதுபோலத்தான் வாழ்க்கைப் பாதையும்! கண்ணீர் முடியும் கட்டத்தில் சிரிப்பு ஆரம்பமாகிறது சிரித்து ஓயும் காலத்தில் கண்ணீர் அரும்புகிறது. இருட்டு முடியும்போது பகல் தொடங்குகிறது; பகல்இறக்கும் போது இரவு பிறக்கிறது. ஒரு நாடு பகலாக இருக்கும்போது உலகில் இன்னொரு நாடு இரவாக இருக்கிறது. இதை நேர்ப் பயணமென்று சொல்ல முடியுமா?

குருவம்மாவும், சக்குவும் அழுது அழுது வீங்கிய முகங்களுடன் குருத்துகளைப்போல் குடிசைக்குள் குந்திக்கிடக்கும் கட்டத்தில் செந்தூரானுக்கு முறுவலிக்கும் காலம் தொடங்கியது

துந்தத் தகவலை ஆண்டிப்பட்டிக்குப் போயிருந்த செந்தூரானிடம் கடை வீதிக்கு ஓடிவந்து ஒரு தொழிலாளி தெரிவித்தான். செந்தூர் பரபரப்பு அடையவில்லை முகக்குறிப்பில் எந்த மாற்றமும் புதிதாக முளைக்கவில்லை தகவல் கொண்டுவந்தவன்வடித்த கண்ணீரைப் பார்த்துக்கூட செந்தூரான் மனம் கசியவில்லை.

"என்டா அழுகிறுப்' என்னைக்கொல்வதற்காகப பொன்னையா கட்டிய பொய்ச்சாரத்தில் நான் செண்பகம்சேர்வையைப் பலிபிட்டேன்" என்று செந்தூரான் வெளிப்படையாகச் சொல்லிவிட முடியுமா?

சனிக்கிழமை இரவு பொன்னையாவும், சுடலையும் செந்தூரானைக் கொல்வதற்காகப் போட்ட சதியை உற்றுக்கேட்டுக் கொண்டிருந்த செந்தூரான் திங்கட்கிழமையன்று வழக்கப்படி மேல் தளத்திற்குப் போகாமல் அன்று செண்பகத்தை அனுப்பிவிட்டு அவன் ஆண்டிப்பட்டிக்கு போவது போல் போய்விட்டான் சாரம் செண்பகத்தை காவுகொண்டு விட்டது.

சக்கு கயிற்றுக்கட்டிலில் படுத்துக் கிடந்தாள். சோகத்தாலும் சுருண்டு சுருண்டு படுத்துக்கதறியதாலும் அவள் முகத்துரை விழுந்து காணப்பட்டது. கண்கள் மாதுளிர் போல் இளஞ்சிவப்பேறி ரோஜா மொசகுளைப்போல் இருந்தன. குருவம்மா அப்போதுதான் கிணற்றுக்குப் போய்விட்டு வந்தாள். குடிசை வற்றிய குளத்தைப்போல் விகாரமாயிருந்தது.

செந்தூரான் சோகமே உருவாய் குடிசைக்குள் நுழைந்தான்! எல்லாம் நடிப்புத்தான்! "அவ்வளவுதான் உங்களுக்குக் கொடுத்து வச்சது? ஒண்ணுக்கும் கவலைப் படாதங்க; நான் எதுக்கு இருக்கேன்?' செந்தூரான் தூண்டிலைப் போட்டான்.

"இல்லே தம்பி, ஊருக்குப் போயிடலாம்னு நெனைக்கிறோம். சக்கு, சின்னப்பிள்ளை இங்கே நாங்க இருந்து என்ன பண்ணப்போறோம்?"

"அங்கே போயி என்ன செய்யப்போறீங்க? அங்கேயும் ஏதாவது வேலைதானே பாக்கணும்?"

'எங்கே இருந்தாலும் அப்படித்தான்...இருந்தாலும் சொந்த ஊரு மாதிரி இருக்குமா தம்பி" குருவம்மாளின் பேச்சில் பழைய தெம்பு இல்லை.

"செண்பகக் கொத்தனாருதான் இங்கே பெரிய கொத்தனாரு! அவருமேலே இங்கே எல்லாருக்கும் ரொம்பப் பிரியம்...ஆனையினாலே அவரு குடும்பத்தை நடுத்தெருவிலே நிக்கவைக்க இங்கே ஆருக்கும் சம்மதமில்லே. தொழிலாளிங்கெல்லாம்பரிப்போட்டுஐநூறு ரூபா சேத்து என்னிடம் கொடுத்திருக்காங்க! நீங்க ரெண்டுபேரும் இங்கே குடும்பத்தோட இருக்கணும். ஒங்களுக்கு ஒரு டீக்கடை வச்சுக்கொடுக்கப்போறோம். தொழிலாளிங்கெல்லாம் அங்கேதான் சாப்புடணும்னு சட்டம் போட்டாச்சு! அணைக்குப் பக்கத்திலே ஒரு இடம் பார்த்திருக்கோம். அடுத்த திங்கக்கிழமை நல்ல நாளு' அன்னைக்கேயே கடையெ ஆரம்புச்சுடலாம்னு முடிவு பண்ணிட்டோம்" குருவம்மாவை பேசவிடாமல் பட்டாசு வெடிப்பது போல் பேசிக்கொண்டே போனான் செந்தூரான்.

சக்கு புரண்டு படுத்தாள்! கட்டில் நெறுநெறு என்று சத்தம் போட்டது.

'சக்கு! முழிச்சு பாரம்மா. மாமா வந்திருக்குது தெரியலையா? குருவம்மா எதற்காக இப்படிச் சொன்னாள்? செந்தூரான் மீது பிரியமாகவா?' ஒரு வயதுப்பெண் புரண்டு புரண்டு குப்புறவும், மல்லாக்கவும் மாறி மாறிப் படுப்பதை ஒரு இளைஞன் விட்டுப் பார்த்துக்கொண்டிருக்க அனுமதிக்கிறோமே என்ற எரிச்சல்தான் அவளுக்கு. அதை எப்படித் தடுப்பது? எதைச் சொல்லியாவது சக்குவை எழுப்பி உள்ளே அனுப்பிவிட வேண்டும் என்பதற்காகத்தான் குருவம்மா இப்படிச் சொன்னாள். பெண்கள் அறிவு படைத்தவர்கள், அதிலும் தமிழ்ப் பெண்கள் நுண்ணறிவு படைத்தவர்கள். பள்ளிக்கூடத்திலும், பெற்றோர்களிடத்திலும், கணவனிடத்திலும் கற்றுக்கொண்டவைகளைவிட மிக முக்கியமானவைகளை அவர்கள் தானாகவே கற்றுக்கொண்டுவிடுகிறார்கள். ஆண்கள் கூடப் பண்பை விட்டுக்கொடுத்து விடுவார்கள். ஆனால் பெண்கள் அதில் வச்சிரக் கோட்டைகள் தாம்! குடுமியைக் கிராப் பாக்கி வேட்டியைச் சூட்டாக்கிய வெள்ளைக்காரன் புடவையைக் கவுனாக்க முடியாமல் போனதற்குக்காரணம் தமிழ்ப் பெண்களின் இளகாத பண்பாட்டுப் பிரியம்தானே!

"சக்குபாய் டீஸ்டால்" ஆரம்பமாகிவிட்டது. டீ அடிக்கத் தெரியாத குருவாம்மா! ஆளில்லாத கல்லாப்பெட்டி! ஆரம்பத்தில் சக்குபாய் டீஸ்டால் இப்படித்தான் மந்தமாக இருந்தது. ஆறு மாதங்களில் குருவம்மா தயாராகிவிட்டாள் ஒப்பெபாடி, சுருள் போளி என்று. செண்பகச் சேர்வை செங்கல் அடுக்கிய நேர்ப்பால் குருவம்மா பல காரங்களை அடுக்கிக் காட்டினாள். வியாபாரம் துளிர்விட்டது. ஓய்வு நேரங்களில் வந்து 'ஓசி' டீ குடித்துக் கொண்டிருந்த செந்தூரான் இப்போது கல்லாப்பெட்டியில் உட்கார்ந்துவிட்டான். புதிதாக வருவோர், கடை அவனுடையதோ என்ற சந்தேகப் படுமளவிற்கு செந்தூர் அங்கே உரிமை கொண்டாட ஆரம்பித்துவிட்டான்.

"சக்கு!"

"என்ன மாமா!"

"அம்மாவோட கூடமாட இருந்து ஒத்தாசை பண்ணுமெ உள்ளே என்ன பண்ணறே?'

அவ எதுக்கு? நீ உள்ளே தானே இருடி சக்குவுக்குப் பதிலாக செண்பகம் இப்படிப் பேசுவது செந்தூருக்கு வெறுப்பாகத்தானிருந்தது அதே நேரத்தில் செந்தூரான் சக்குவோடு அடிக்கடி பேச்சுக் கொடுப்பதும் குருவம்மாவுக்கு ஆத்திரமாகத்தானிருந்தது. தான் பெற்றதென்றாலும் தனதல்லவென்றாலும் ஒரு பெண் கெட்டுப்போவதற்குரிய வாய்ப்பை உண்டாக்காமல் இருந்தால் அவள் கெடமாட்டாள் என்ற தத்துவத்தைக் குருவம்மா எந்தக்கல்லூரியில் போய்க் கற்றுக்கொண்டாள்? ஆம், கற்றுக்கொண்டவளைப் போல் அவள் சக்குவைப் பொறுத்தவரையில் எச்சரிக்கையாகத்தான் இருந்தாள்.

'செப்புக்குடம் நெளிந்தால் நிமிர்த்துக்கலாம்; மண்பானை உடைஞ்சுட்டா என்ன செய்யறது? பொம்பளைங்க வாழ்க்கை அது மாதிரிதான்.' குருவம்மா அடிக்கடி சொல்லி சக்குவை இடித்துக்காட்டும் பழமொழி இதுதான்!

அன்றொரு நாள் இருட்டிய பிறகு குருவம்மா நடைபாதையிலுள்ள கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தாள். வழியில் இரண்டு பேர் — அணைக்கட்டுத் தொழிலாளர்கள் சுருட்டைப் பிடித்தபடி சம்புலிபுத்தூர்ப் பக்கம் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சில் குருவம்மா குடும்பம் அடிபட்டது. குருவம்மாவுக்குவியர்த்து விட்டது...

"செந்தூரான் கல்லாப் பெட்டியிலே உட்கார்ந்துவிட்டான்...இனி வுருப்பட்டாப் பிலேதான்!"

யாரைச் சொல்றே! குருவம்மாவையா? அவமகளையா?'

'...து முதல்லே கெடைக்குதோ அதைப் பத்திக்குவான் அவன் எமனாச்சே?'

"செந்தூரானைப் பற்றி குருவம்மாவுக்கு எதுவும் தெரியாதோ? தெரிஞ்சா உள்ளே விடமாட்டாளே!'

"தெரியாமையா இருக்கும் எல்லாம் தெரியும்! தெரியாதது மாதிரி காட்டிக்குவா"

"இல்லேப்பா குருவம்மா அப்படிப்பட்ட ஆளா தெரியலேயே ஒரு வேளை அவளே செந்தூரானுக்கு மகளை கொடுக்க எண்ணியிருந்தா?"

"இருக்கலாம்...ஆனா அவன் ஏற்கனவே பல குடும்பங்களைக் கெடுத்தவன்னு குருவம்மாவுக்குத் தெரிஞ்சா கொடுப்பாளா

'பாவம்! மாட்டிக்கிட்டு முழிக்கிறதுபோலிருக்கு பொன்னையாதான் அவனுக்குச் சரி' பொன்னையாவைக் கண்டா செந்தூரானுக்குச் சிம்மசொப்பனந்தான்'

'பொன்னையா அவன் பல்லை உடைச்சவனல்ல; பயமில்லாமெ இருக்குமா?'

இந்த உரையாடலைக்கேட்ட பிறகு குருவம்மாவுக்குத் தலை சுற்றுவதுபோலிருந்தது.

'அப்பவே நான் மீனாட்சியை வேண்டிக்கிட்டேனே! என் வயிற்றிலே பொறந்தது ஆம்புளைப் புள்ளையா இருந்திருக்கக் கூடாதா? பித்துப் பிடித்தவள்போல் முனங்கிக் கொண்டு வீட்டுக்கு விரைந்தாள் ஆனால் வீட்டில்?

அங்கே...விபரீதம் அரங்கேற்றுவதற்கு களைகட்டி நின்றது.

'சக்கு!' குருவம்மா அலறினாள்.

'மாமா...மாமா! அம்மா வந்திருச்சி கையை விடுங்க!' என்று சக்கு திமிறிக்கொண்டு பேசினது குருவம்மாவின் காதில் விழுந்தது

"என்ன தம்பி இதெல்லாம்? எங்களை இங்கே இருக்கச் சொல்றீங்களா?" குருவம்மாவின் இதயம் வெடிப்பதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது.

"இப்போ என்ன செஞ்சிட்டேன். சிரிக்கிட்டு வாறீங்க!" செந்தூரான் முகத்தை முறித்துப் பேசினான்.

"சரிதான் தம்பி' நீங்க இப்டீன்னு எனக்குத்தெரியாதே?' குருவம்மா உள் அர்த்தம் வைத்துப் பேசினாள்;

"பேசத் தெரியாமெப் பேசாதீங்க; நான் அப்பறம் பொல்லாதவனாயிருப்பேன்!"

"எங்க வூட்லே ஓட்டையை வச்சிக்கிட்டு ஊரிலே இருக்கவங்களைப் பேசி என்ன நடக்கப்போகுது" என்று பதில் சொன்ன குருவம்மா எதிரே கிடந்தவிளக்குமாற்றை எடுத்து சக்குவை ஓங்கிச் சாத்தினாள். செந்தூரான் தெரியாமல் கருநாகம்போல் வெளியில்கிளம்பி விட்டான்.

பொழுது விடிந்தது!

காலையில் சாயா குடிக்கும் வாடிக்கைக்காரர்கள் அனைவரும் வழக்கம்போல் வந்தார்கள். செந்தூரான் தான் வரவில்லை. கல்லாப்பெட்டி காலியாகக் கிடந்தது.

"என்ன இன்னும் மேஸ்திரியைக் காணோம்?"

"மேஸ்திரி ஏன் வரல்லே?"

'மேஸ்திரி ஊரிலே இல்லேபோ?'

ஒவ்வொரு தொழிலாளியும் இப்படித் தனித்தனிக் கேள்விகளைப் போட்டார்கள். ஆனால் குருவம்மா அவர்களுக்கெல்லாம் ஒரே பதிலைத்தான் சொன்னாள்— ஏனோ வரல்லே தெரியல்லே"

எப்போதும் அவளது தூய உள்ளத்திலிருந்து வெளிவரும் வார்த்தைகளில் நறுமணமிருக்கும். யார் என்ன பேசினாலும் எப்படிப் பேசினாலும் அவைகளை தனது இளஞ்சிரிப்பில் மூழ்கடித்து வாடிக்கையைப் புதுப்பித்துக்கொள்ளும் அவள் அன்று கடுகடுப்பாகவே பேசினாள்; பாலில் துரும்பு விழுந்ததுபோல் அவள் முகத்தில் சோகக்குறி படிந்துகிடந்தது. எப்பொழுதும்போல் அவள் சாப்பிடத்தான் செய்தாள். வழக்கமாகக் குடிக்கும் தேத்தண்ணீரை அவள் நிறுத்தவுமில்லை, வெள்ளாட்டைபோல மென்று கொண்டிருப்பாளே வெற்றிலைச் சுருளை அதைக் கூட அவள் ஒதுக்கிவிடவில்லை. இருந்தும் அவள் ஒருவாரத்திற்குள் எவ்வளவு களைத்து மெலிந்துவிட்டாள்! கவலை கண்களுக்குத் தெரியாத ஒரு மாய மிருகம் அதற்கு இரண்டு வாய்கள் உண்டு. ஒருவாய் மனிதன் உள்ளத்தைக் கீறிக் கொண்டிருக்கும். இன்னொரு வாய் அவன் உடலையே தின்று

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
தரம்நாடுவோர்தவறுமல்நாடுவது
தமிழகஎண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11
தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்.

உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 26. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி 12. அழகர்கோவில் சாலை, 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

இந்திரஜித்

கருணாநிதி

மண்ணெலாம் வீரம் துள்ளும் — மாதர்
கண்ணெலாம் கற்புச் சொல்லும்;
விண்ணிலே ஏறுகின்ற கொடிநிழல்...பகையை வெல்லும்;
நாட்டுப் பண்ணெலாம் மானம் காட்டும்!
எண்ணிலாத் திறம்முகிழ்க்கும் மறவர் கோட்டம் —
வெண்முகில் குடைபிடிக்கும்
பொன்சுவர்க் கோட்டைமீது.
தண்ணென முத்தமிட்டுத் தடங்கடல் தவமிருக்கும்!
இன்னுயிர் பெரிதேயல்ல, இங்குவாழ் மக்களுக்கு!
மன்னுயிர் காப்பதுவே மாத்தமிழர் இலக்கணமாம் எனக்கூறும்

தென்னிலங்கைப் பெருங்குடியின் வழிகாட்டி,
தன்மானச் சுடர்விளக்கு — தமிழர் தலைவன்.
எந்நாளும் புகழேட்டில் வாழுகின்ற இராவணன் காண்!
மின்னலிடைப் பெருந்தேவி மண்டோதரி அவன் மனைவி!
இருவரும்
கன்னல்மொழி கேட்பதற்கு மகவொன்று வேண்டுமென்று

கடுந்தவங்கள் இயற்றுமல் கங்கையிலே ஆடாமல்
கனியொன்றைப் படைத்திட்டார்; கட்டிலறைக் கவிபாடி!

காதல் அருவியிலே கண்டெடுத்த புதுமலரை —
ஆனழகைக் களிப்புக் கடலாழ்ந்து பெற்றெடுத்த நித்திலத்தைக்

கண்ணெற்றி மகிழ்ந்திருந்தார்;
கவலைகளை மறந்திருந்தார்!

♣ ♣ ♣

மாணிக்க மிழைத்த தொட்டில் மகவின் கால்பட்டு நொறுங்கிப் போகும்!
மறுநாளே திருநாள் உண்டு — மகன் காட்டும் வீரமகண்டு
உமிழ்கின்றன் வாய்நீர் என்றல் — அதனை
அமிழ்தென உண்ணுகின்றர் அன்னை தந்தை!
தவழ்கின்றன் கூடத்தில் — பின்னை தமிழ்பாடித் தொடர்கின்றன் பெருவீரன்!
அகழ்கின்ற நிலந்தனிலே ஆணிப்பொன் மணிக்குலத்தை எடுக்கின்றர்!
புகழ்கின்ற குறளைப்போல் ஓர் குழவிக் கீடாமோ அவையெல்லாம்? —
இகழ்கின்றர் இல்லறத்தை ஒளித்தவாயர்!
என் சொல்வேன் அவர் அறிவை!
மகிழம்பூப் பிள்ளைதரும் பேரின்பம் மறுக்கின்ற /
காவியமும் இலக்கியமும் கள்ளி என்பேன்!
கவைக்குதவாக் காட்டுச் சுள்ளியென்பேன்!
"முக்கனியின் கூட்டன்றே குழந்தை முத்தம் —,
முத்தமிழின் சுவையன்றே அதன் முறுவல்!'
எனக் கொஞ்சி வஞ்சிதனை அணைத்துக் கொள்வான்;
'பார்க்கின்றன் குழந்தை பெனப் பாவையும் விலகிக் கொள்வாள்;
'கோர்க்கின்றன் முத்தெடுத்துச் சிரிப்பாலே எனச்சொல்லி உன்
வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம்; வாடா என் கண்ணே! யென்று
கணைகளால் தாக்குண்ட தழும்புமார்பில் தங்கத்தைத் தழுவிக் கொள்வான்!
நுரைகடலில் பருவநாளில் உயர்கின்ற — அலையைப்போலே
தரைமீது காலூன்றித் தாவிப் பாய்ந்தான்
தளிர்மகன் மலைமுகில் பிடிக்க என்று
குளிர்மொழி சிந்தி நின்றள் — கோபபெருந் தேவியவள்!
"வேகங்கொள் வீரனுக்குப் பிறந்த செல்வம்
காகம்போல் கோழிபோல் வாழ்ந்திடுமோ? —
'மோகங்கொள் உயிர்மீது' எனச்சொன்னால் கேட்டிடுமோ?
சாகவே அஞ்சாது பாய்ந்திட்டான் வெண்முகிலின் மேலே!
ஆகவே அவன் பேரை மேகநாதன் என்பேன் இனிமேலே!"

இலங்கைத் திருநகரின் இளவலுக்குப் பேர்சூட்டும் திருநாள் —
சதங்கை ஒலிக்கின்ற மயிலினங்கள் ஆட்டமுடன் நடைபெற்ற பெருநாள் —
அந்நாளில் எழில் மகனை அணைத்துக் கொண்டு
இந்நாடு ஆளவந்த குலவிளக்கே வாழ்கவென்று
வடித்துநின்றன் இன்பக்கண்ணீர்ப் பாலை தெறித்ததுபோல்
சிரித்துநின்றர் மாதரெல்லாம்!
படித்துநின்றர், இளவலின் முகத்தினிலே வீரத்தை மறவரெல்லாம்!
மணவீட்டில் 'பாலி யிலை வளர்கின்ற தானியம்போல்
'மளமளென வளர்ந்திட்டான் மேகநாதன் மண்மீதொரு மலைபோல்!
இரட்டிப்பாய் எட்டாண்டு முடிவதற்குள் அடவிசென்று
இருசிங்கம் பிடித்துவந்து மாளிகையில் நாய்போலக் காவல்வைத்தான்
இருபதாம் ஆண்டினிலே இரும்புத்தூண்
ஒன்றை ஓர்கையால் உடைத்துப் போட்டான்
இலங்கையிலே பகைநுழையா அரண் அமைத்தான்
இலக்கியத் தமிழுக்கு எழிலான மன்றம் கண்டான்
அப்போது —
இந்திரனும் தேவமன்னன் இவனோடு போரிட்டுத் தோற்றதாலே
இந்திரஜித்தனெனும் பெயருக்குத் தகுதியானன்.

♣ ♣ ♣

'இனியவளே! என்னமுதே' நம்மகனின் பெருமைகளால்
இருதயத்தில் புதுஎழுச்சி! புதுஉணர்ச்சி புதுஇளமை திரும்புதடி —
கனிமொழியே! அதன் நினைவாய்ப் பழமுத்தம் தந்திடடி!
தனிநின்றல் தாங்கவில்லை காதல் தொல்லை எனச்சொல்லி
கண்டுவிட்டான் முல்லைப்பல்லை' தமிழ்க் கொல்லைக்
காவலனும் இராவணனைத் தழுவிநின்று;
'என்னுயிரே! அத்தானே! ஒன்று சொல்வேன்,
வண்ணமலர் முதிர்ந்த பின்பு பழமேபாகும் —
அந்நிலையை நோக்கித்தான் நடக்கின்றோம் நாமிருவர் — உண்மையன்றோ?
வெண்ணிலவுக் காலந்தன்னில் நாம்பட்ட பாடுகளை எண்ணிக் கொண்டு,
கண்ணமுதாம் மகனுக்குக் காதல் துணைபொன்றைக்
காலத்தில் நாடுதலே நலமாகும்? — எனச் சொன்னாள்,
வண்டமரும் பூங்குழலாள் மண்டோதரி'! — அதுகேட்டு
இராவணன்
'ஆம்' என்று தலையசைத்தான் — ஆனாலும் விடவில்லை..
அன்றிரவை இருவருமே வென்றிருந்தார்;
உதயத்தின் ஒளிபட்டு எழுந்திருந்தார் — அந்தச்
சமயத்தில் ஓர்தோழி ஓடிவந்தாள்;
'மாம்பழப் பெண்ணொருத்தி மேகநாதன் மாளிகையில்
ஆம்பற் கொடிபோல நாணமுடன் நிற்கின்ற' சேதிகேட்டார்!
அதிசயத்தால் திகைத்துப் போனார் பெற்றோர்கள் — ஆனாலும்
அதிரசத்தைச் சுவைத்ததுபோல் மன்னன் மகிழ்ந்து
'ஆருயிரே! நீபோய்ப் பார்த்துவா உன்மருமகளை! அவள்
தார்வேந்தன் மகளோ? — தளிர்க் கொடியோ?
கார்குழலாளோ — நம் கண்மணிக்கு ஏற்றவளோ?
என்பதெல்லாம் அறிந்துவா ஓர் நொடியில்' என்றான்
அவள் சென்றாள் — பின் வந்தாள்!
'என்னடி கண்ணாட்டி; பொன்னடி பூமியில் படாமல் பறக்கின்றாய்?
சொல்லடி சுவைத்தமிழே!' எனச்
செவிநீட்டித் துடித்திடும் ஆளனிடம்
உள்ளதுஉள்ளபடி உரைப்பதற்கு முன்வந்தாள் இலங்கைராணி
'சந்தன மரங்கடைந்து சிலைசெய்து,
வெந்தழல் நிறமெடுத்து இதழ்பொருத்தி,
இந்திர வில்லனைய புருவத்தின் கீழ்
எழில்நீல மணியிரண்டை இமைக்குள் பதித்துச்
செந்தமிழ் மணக்கின்ற திருவாயை அசையச் செய்து
சந்ததம் புகழ்பாடும் பான்மையிலே உயிரூட்டிக் கொண்டுவந்த அற்புதமாம்!
அழகரசி அமுதமொழி! அன்புவிழி!

பழகுதமிழ்ச் சுவடியிலே வார்த்தையில்லை உவமை காட்ட!
ஒன்று சொல்வேன்.
பதறுதீர் அதனைக் கேட்டு; பகைவனின் புதல்வி அன்னள்!
சிதறாமல் சிந்தாமல் நம்செல்வன் எடுத்துவந்த செந்நெற்கதிர்!
நம்மைப் படைகொண்டு எதிர்த்துப் பார்த்து உயிர்தப்பி ஓடிவிட்ட நாகன் மகள்!
அவள் பெயர் சுலோச்சனையாம் — சுவை நிறைந்த பலாச் சுளையாம்!
ஓர் நாள், மணிமாடச் சோலையோரம் மங்கை நல்லாள் உலவுங்காலை
பணிபாரம் பார்த்துவிட்ட பூனைபோல் மேகநாதன் அங்கு சென்றன்!
'தணியாத காதலாலே தவிக்கின்றேன் அன்பே'யென்று யார்க்கும்
பணியாத தலைதாழ்த்திக் காதற்பிச்சை கேட்டு நின்றன்!
'துணியாத காரணத்தால் முதலில் நான் துவங்கவில்லை —
தூயவரே, உமது பேர் கேட்டுப் பலநாள், நான் தூங்கவில்லை! புலிநகம்
அணியாத என் கழுத்தைப் பாரும் — உடன் அதைக் கொண்டு வாரும்!
இனியாரும் எனக்கு வேண்டாம் இந்த அன்பிருந்தால் போதும்' மென்றாள் —
உங்கள் மகன் சிங்கமன்றே!
பொங்கும் வேங்கைக்குப் பூனையா பிறந்துவிடும்?
தங்கம் பெயர்த்தெடுத்துத் தோள்மீது தூக்கிக் கொண்டான்.
அங்கமெலாம் குளிர அவளும் தொத்திக் கொண்டாள்;
மங்கையுடல் தந்திட்ட புதுப்பலத்தால்
நாகநாட்டு மதிற்சுவரைத் தாண்டிவிட்டான்
நங்கை அவள் சொன்னகதை இதுதான் மன்னா, அறிக' என்றன்;
அகமகிழ்ந்தாள்!
கொடுங்கைத்தேர் பவனிவரும் வீதிகளில் விழாவெடுத்து,
இலங்கைத் தீவின் மருமகளாய் சுலோச்சனையை
ஆக்குவதே நலமென்றான் இராவணனும்
அவளும் நன்றென்றாள்
'திருப்பித்தா என்மகளை! எனக்கேட்டு நாகநாட்டான்
கிறுக்கிவிட்ட ஓலைதனைக் கிழித்துப் போட்டான் மேகநாதன்!
'அறுக்கின்றேன் அவன் தலையை' எனச்
சொல்லிப் பழியேற்றுக்
காத்திருந்தான் நாகமாமன்!

♣ ♣ ♣

இந்நிலையில்.....
இராவணனை அழிப்பதற்கு இழிசூழ்ச்சி மேற்கொண்டார் வடவாரியர்கள்

திராவிடனைத் தீர்த்துவிடத் திரைமறைவில் சதிக்கூத்து!
புறவினைப்போலிருந்து பொல்லாத கழுகாக மாறிவிட்டான் ஓர்தம்பி —
அனுமன்எனும் ஐந்தாம்படை யொன்றை அனுப்பி வைத்த ராமனுக்கு
அறிவு புகட்டுகின்ற வழிகண்டான் மேகநாதன்
தீயிட்டு நகர் அழிக்க முயன்றவனின் வால்
நறுக்கித் தோலைப் பதம்பார்த்து ஓட்டிவிட்டான்!
தாவிற்று துரோகவெள்ளம் இலங்கைமீது...!
'காவிற்கு அழகில்லை பூவின்றி
பாவிற்கு அழகில்லை பொருளின்றி!
நாவிற்கு அழகில்லை நயமின்றி!
அதனலே ராமனிடம் இறங்கிப் பேசல்நலம் என்றான்,
குகனோடு 'எழுவரான கொடிய வீடணன்!
அது கேட்டு
'நாகர்க்கும் இலக்கணத்தை நன்றுரைததீர் சிற்றப்பா!
நாடுகாக்கும் போர் மூண்ட பின்னர்
நம் தலைகாக்க மண்டியிடல் மரபல்ல — மானச் செயலல்ல நடப்பீர்' என்றான்
நடுக்கமிலா உளங்கொண்ட மேகநாதன்!
துடுக்குமிகு வடநாட்டார் துவங்கிவிட்டார் போராட்டம்!
இடுக்கண் வருகின்ற நேரமெல்லாம் நகுகின்ற
இந்நாட்டுப்பெருமக்கள் குதித்துவிட்டார் சமர்க்களத்தில்;
உடன்பிறந்தே கொல்லுகின்ற பிணிபாக வந்திட்ட தம்பி செயல்
திடங்கொண்ட இராவணனின் சிந்தையெலாம் கலக்கிற்று!
'புடம்போட்ட பொன்னே! நான் பெற்றெடுத்த கண்ணே!
போருக்கு அனுப்புகிறேன் உன்னை! போய்வா மகனே' — என்றான்.
'தினவெடுத்த தோள்களுக்குக் கிடைத்தது தீனி.'
தீயவர்களுக்குக் கட்டுவோம் சாவூர் ஏணி
என முழக்கி எழுந்து விட்டான் காளை —
'தாய்நாடு காப்பதற்குத் தலைதருவேன் — பகைநாட்டு
நாய் நுழைய வழிதிறக்கும் பாவிகட்குப் பாடம் சொல்வேன்!
வருகின்றேன் எந்தன் தாயே! வழியனுப்பி வையம்மா!
தருகின்றேன் வெற்றிச் சேதி! எனக் கூறிப் பறந்து போனான்,
எதிர்ப்பட்டாள் அவன் துணைவி!
புறப்பட்டேன் போருக்' கென்றான்;

'அரையர்ண்டும் முடியவில்லை மணவிழா நடந்து —
தரையாண்டும் போதாமல் கடலாண்டு வருகின்ற மன்னர் மகனே!
காதல்
கரை தாண்டும் வழியின்றித் தவிக்கின்ற பேதையிடம் போர்ப்
பறையாண்டு முழங்கிற்றதென்று பயணம் கூறல் நியாயமோ? சொல்க'
என்றாள்
'விழுதுபோல் கண்ணீரைச் சிந்துவது அழகல்ல! வில்லாள்
உழுது வீரம்விளைக்கின்ற பரம்பரையில் பிறந்து விட்டோம் —
தொழுது வாழ்வது அறிஞரையன்றிப் பகைவரையல்ல! — பெண்கள்
அழுது தடுப்பது ஆண்களின் கள்ளத்தை யன்றிக்
களம்புகு நிகழ்ச்சியையல்ல!
பழுது வருவது உடல்பொருள் ஆவிக்கேயன்றிப் பழந்தமிழ்ப் பண்புக்கல்ல!
பொழுதுவிடிந்ததும் புறப்பட விடை கொடுத்திடு! என்றான்
போர் முகங்காணத் துடித்திட்ட வேங்கை!
'கொடிபோல எனை வளைத்துத் தோளில் போட்டு
நெடியமதில் தாண்டும்போதும் அஞ்சவில்லை — நாளை,
விடிவதை நினைத்தால் ஏனே குலுங்குகின்ற தத்தான் உள்ளம்?'
அவள் அழுதாள்! அவன் சொன்னான்;
'இடியோசை கேட்டும் மழலை, கைகொட்டிச் சிரிக்கும் நாடு!
'முடியாமை' என்ற சொல்லை அறியாத தமிழர் நாடு — இதைப்
படியாமல் பேசலாமோ, பைங்கிளியே!
என்னை உந்தன் மடியில்போடு'
ஆறுதலால் அஞ்சாநெஞ்சன் உதிர்க்கின்ற வார்த்தைகளால்,
தேறுதல் அடைவதற்கு வழியின்றித் தவித்த பெண்ணாள்
ஏறுதழுவும் அவன் மார்பில் எழில்மலராய் ஒட்டிக் கொண்டாள்! —
'ரத்தச்
சேறுபடிகின்ற திண்மார்பில் முத்தமிடு!' எனக் கேட்டான் —
ஒன்றிரண்டு நூறாகப் பொழிந்துவிட்டாள் முத்தமாரி,
ஒளிந்திருந்த சந்திரனும் எட்டிப் பார்த்தான் — வெட்கிப் போனான்!
'இணையில்லா வீரன் இந்திரஜித்தன் போருக்கு வருகின்றான்' எனக் கேட்டார்
'அணையில்லா நதிபோல வருவானே' என்றார்
'அவன் தேருக்குச் சாரதி நம்ஆள்தான்!
வீணுக்குப் பயமவேண்டாம் விட்டொழிக!
ஊருக்குள் போய்வருவேன் ஒற்றனாக, எனக்கூறி
ஒளிந்து சென்றான் வீடணனும்!
'நெற்றி சுருக்காமல், நீலவிழி கலங்காமல், நெடும்பகையை
வெற்றி கொள்வீர், அத்தான்!
பெற்றிநிறை தாயகத்தின் பெருநிதியே!
கற்றறியா மூடர்கள் கைவரிசை காட்டுதற்கும்
புற்றீசல்போல் புறப்பட்டு வருகின்றார் — என்
கொற்றவனே! குலப்பெருமை காத்திடுவாய்! — எனப்
போர்க்கோலம் பூண்டுவிட்ட வீரனுக்குத்
தார்சூட்டித் திலகமிட்டாள்! வாழ்த்தி நின்றாள் வடிவழகி சுலோசனாதேவி!
'இத்தரை மீதினில் எத்தரைப் புகவிடேன் — என்
பத்தரை மாற்றே! முத்திரை ஒன்' றெனப் பெற்றுச் சென்றான்
'நிகும்பலை என்னுமிடம் நெடியதோர் பாசறை - அங்கு நம்
கும்பலை அழித்திடும் கருவிகள் உண்டு!
இந்திரஜித்தனின் பெரும்படை அதுதான்;
தந்திரமாய் அதைத் தகர்த்திடவேண்டும் — இதை
வீடணன் சொன்னான் வீணர்கள் முகாமில்!
ஆடினார் அனைவரும் ஆனந்த மிகுதியால்!
போர்ப்படை யுடனே புலிநிகர் தமிழன்
புகுந்தான் நிகும்பலைப் பாசறை தன்னில்
யார்க்கும் தெரியாக் கருவிகள் எல்லாம்
எடுத்தான் — கொடுத்தான் வீரர்கள்கையில்! \
ஆர்த்தது முரசம் பாசறை வெளியே!

அதிர்ந்தது பாசறை எதிரிகள் வரவால்!
குகைக்குள் திடுமெனச் சிக்கிய வீரன் — எரிமலைப்
புகையைக் கக்கினான் சினந்தே!
எங்கணும் எதிரிகள் சூழ்ந்தனர் அங்கே —
சங்கையிலே என்சிற்றப்பன் செய்திட்ட வேலையிது!
துரோகப் பங்கை முடித்திட்டான் —
துணிக்கின்றேன் அவன் தலையை
சுழலும் வாளாய்ச் சுற்றினான் தேரில்!

(10ம் பக்கம் பார்க்க)

கல்லையும் கரைக்கும் ஒரு கண்ணீர்க் கடிதம்!

இந்தியாவின் இருண்ட நாட்களின் போது இந்திராவை மறைமுகமாகத் தாக்கும்படியாக ஒரு படம் எடுக்கப்பட்டது அதன் பெயர்: 'கிஸ்ஸா குர்சி கா (நாற்காலியின் கதை) அப்படம் தணிக்கைக்கு அனுப்பப்பட்டது, மீண்டும் தயாரிப்பாளரின் கைக்குக் கிடைக்கவில்லை.

தாயாரைக் கேலி செய்யும் அப்படத்தைக் கண்டு கோபமுற்ற சஞ்சய் அன்றைய மத்திய அமைச்சராக இருந்த சுக்லாவின் துணையோடு அப்படத்தையே எரித்துச் சாம்பலாக்கி விட்டார்

அதன் வழக்குகள் தொடர்பான விசாரணையையொட்டி சஞ்சய் சிறையிலடைக்கப் பட்டார்

நெருக்கடி காலத்தில் அதிக அத்துமீறல்கள் செய்தவர் என நீதிபதி ஷாவால் கூறப்பட்ட சஞ்சய் சகல வசதிகளுடன் திகார் சிறைச்சாலையின் முதல் வகுப்பில் அடைக்கப் பட்டார்

குளிர்ச் சாதனம் செய்யப்பட்ட அறை— தொலைக் காட்சி (டெலிவிஷன்) வானொலிப் பெட்டி—பத்திரிகைகள், வார, மாத இதழ்கள். யாரும் அதை ஒரு சிறைவாசம் என்று சொல்ல முடியாது.

நாள்தோறும் அவரை அவருடைய குடும்பத்தார் காணலாம்; கண்டு பேசலாம்; வீட்டில் சமைக்கப்பட்ட அறுசுவை உணவைக் கொண்டு போய்த் தரலாம...

இவ்வளவு வசதிகளுக்குப் பிறகும்—'தம் மகனுக்குச்சிறையில் என்னென்ன துன்பங்கள் அசௌகரியங்கள் ஏற்படப் போகின்றனவோ, என்று சொல்லி வருத்தப்பட்டார் இந்திரா. அது மட்டுமல்ல—

ஓர் உயர்தரமான (Five Star Hotel) உணவு விடுதியிலிருக்கும் அறையைப் போன்றிருக்கும் சிறை அறையில் 'அடைக்கப்பட்டிருந்தும்' கூட மகனைப் பார்த்ததும் அன்னை' இந்திராவின் கண் கலங்கி விட்டதாம்.

ஆனால்—

இருண்ட நாட்களின் போது எத்தனையோ இளைஞர்களும் இளம்பெண்களும் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டார்கள், சித்திரவதைக் கொட்டடிகளில் துன்புறுத்தப்பட்டார்கள்; யாரை எங்கே வைத்திருந்தார்கள் என்று யாருக்குமே தெரியாது; காவலரால் இழுத்துச் செல்லப்பட்டவர்களை மீண்டும் உயிருடன் காண முடியும் என்று நம்பிக்கை கொள்ள முடியவில்லை

அப்போதெல்லாம் தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்த அன்னைமார்கள் வடித்த கண்ணீர்ப் பெருக்கு' அதிகாரப் போதையினால் 'அன்னை இந்திராவின் கண்களுக்குப் படாமற் போய் விட்டது.

'ஒரு பயங்கரமான கனவு போன்ற அந்த இருண்ட நாட்களின் போது கேரளத்தில் காவலர்களால் அடித்தே கொல்லப்பட்ட மாணவர் ராஜனின் தந்தை திரு வாரியார்—'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (22-5-78) இதழில் எழுதியுள்ள கடிதம் படிப்போரைக் கண்கலங்க வைக்கிறது

"மே திங்கள் பத்தாம் நாள் பத்திரிகையாளர்களிடையே பேசும்போது சிறையில் சஞ்சய் துன்புறுத்தப்படலாம் என்று கூறி, தம் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார் இந்திரா. தம் மகன் எங்கே அடைக்கப்பட்டுள்ளான் எனத் தெரிந்து கொள்ள விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

அவருக்கேற்பட்டிருக்கும் இவ்வுணர்வு இயற்கையானதே. ஆனால் உண்மையில் ஒரு தாயின் வேதனையை 'கோடரி வெட்டு தன் மீது விழுந்த பிறகே' உணர்ந்துள்ளார்.

"நீங்களும் கூடஒருதாய்தான் தன்னுடையஒரே மகன் எங்கே இருக்கிறன் என்பதைககூட அறியாது நிரந்தர நோயாளியாகிவிட்ட, ராஜனின் தாய் படும வேதனையை உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். சட்டவிரோதமாகக காவலரால அவன் சிறை வைக்கப்பட்டுள்ளான்"

இருண்ட நாட்களின்போது இவ்வாறு நான் இந்திராவுக்கு ஒரு கடிதம் எழுதினேன். 'படுத்த படுக்கையாகிவிட்ட நோயாளித் தாயார் ஒரே ஒருமுறை தான் பெற்றெடுத்த பிள்ளையைப் பார்க்கவாவது வாய்ப்புத்தாருங்கள்' என்றெல்லாம் எத்தனையோ முறை கெஞ்சினேன். எல்லாமே செவிடன் காதில் ஊதிய' சங்காயிற்று

சஞ்சயைப் பெற்றெடுத்த தாய் ராஜனைப் பெற்றெடுத்த தாயின கண்ணீரைத் துடைகக முன்வரவில்லை

ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், சட்டப் பாதுகாப்பு, சட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்ள எல்லாவாய்ப்பும்இப்போது இந்திராவுக்கு உண்டு. தம் மகன் சிறையில் நலமாக இருக்கிறன் என்றும் நிச்சயமாக அவருக்குத் தெரியும்—ராஜனின் தாய்க்கு ஏற்பட்ட நிலை போன்றதல்ல, இந்திராவினுடையது!

சிறையில் தம் மகனின் நலன் குறித்து அவர் அச்சப்படுவதாகக் கூறுவது வெறும் அரசியல் ஸ்டண்ட்'!

தம் மகன் எங்கிருக்கிறன் என்றும், எந்தச் சூழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறன் என்பதும் இந்திராவுக்குத் தெரியும். ஆனல் எங்கள் மகன் காவலரின் கீழ் காவலில் வைக்கப்பட்டபோது இந்த அடிப்படை உரிமைகள் கூட எங்களுக்குத் தரப்படவில்லை.

எங்கள் மகனோ, எங்கள் குடும்பத்தைச் சார்ந்த வேறு யாருமோ தாய் நாட்டிற்குக் கேடு விளைவிக்கும் காரியம் எதையும் செய்தவரல்லர்.

என்றபோதும்—

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கொடுங் குற்றவாளிக்குத் தரப்படும் சலுகைகள் கூட எங்களுக்கு மறுக்கப்பட்டன.

இந்திய நாட்டின் இலட்சக்கணக்கான மக்களின் அடிப்படை உரிமைகளை 'நசுக்கிய' அதே மாது தான் சட்டம் வழங்கும் சலுகைகளைப் பெற்று வருகிறர். இதற்காக அவர் ஜனதா அரசுக்கு நன்றி கூறவேண்டும்; இப்போது அவர் குற்றம் சாட்டுகிறர்; 'இன்னும் வழக்காடி வரும் கைதிகளுக்குத் தரப்படும் வசதிகள் சஞ்சய்க்கு மட்டும் தரப்படுவதில்லை" என்று.

இது அநீதிதான்—உண்மையாக இருந்தால்!

ஆனல் —

தம்முடைய 'இருண்ட' ஆட்சியின்போது பயங்கரமான சூழ்நிலையில் வைக்கப்பட்டிருந்த இலட்சக் கணக்கான மக்களுக்கு இதே சலுகைகளை அளிக்க மறுத்த இந்திராவுக்கு, தம் மகனுக்காக இப்போது அவைகளைக் கேட்பதற்கு என்ன உரிமை இருக்கிறது?

ராஜனின் தாய் சந்தித்த 'தலைவிதியை' எந்த ஒரு தாயும—இந்திராவும்கூட சந்திககக் கூடாது என்று மனப்பூர்வமாக நான் விரும்புகிறேன்—அந்தத் தாயின் மகன் எவ்வளவு பெரிய குற்றம் இழைத்திருந்தாலும்!

—ஜாகீர்

மும்பெரும் தத்துவ டாலர் செயின்கள்

மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் " மணிவாசகம் " பொறிக்கப்பட்டது ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் சிலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானல் ரூ. 3 அட்வான்சும், செயினுடன் டாலர் வேண்டுமானல் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினல் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

யோகிகள் - படப்பிடிப்பு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'போக்குவரத்திற்காக' சொந்தத்தில் ஒரு ஹெலிஹாப்டர் வைத்திருந்தார் (அண்மையில் மத்திய அரசால் அது பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது) சொந்தமாக ஒரு விமான நிலையமும் கட்டிக் கொள்ள ஏற்பாடு செய்தார். அம் முயற்சி அரசாங்கத்தால் முறியடிக்கப்பட்டது.

மகேஷ்யோகியின் கடந்த காலம் யாருக்குமே தெரியாது; ஒரு காவிக் கோவணத்தோடு உடம்பெல்லாம் நாள்பட்ட அழுக்கு படிந்திருக்க ஒரு சாதாரண 'சாமியாரா'கத்தான் ரிஷிகேசத்தில் அவரும் ஆரம்பத்தில் சுற்றிக் கொண்டிருந்தார்; ஒருமுறை வெளிநாடு சென்று திரும்பிய அவர்—அதன்பிறகு 'பிரபல'மாகிவிட்டார். 'சமயப் பிரச்சாரத்திற்கு' என்று கூறி வெளிநாட்டில் ஏராளமான பணம் திரட்டிய அவர், ரிஷிகேசம் திரும்பியதும் 'ஆசிரமம்' கட்டத் தொடங்கிவிட்டார்.

அவருடைய ஆசிரமத்தில் எண்பத்துநான்கு அறைகள் மட்டுமல்ல; இரகசிய (அண்டர் கிரவுண்ட்) அறைகளும் நிறைய உண்டு. மேலும் ஓய்வெடுப்பதற்சென்று தனியாக அவருக்கொரு மாளிகையும் உண்டு.

அநுபோக...

'மத மறுமலர்ச்சி இயக்கம்' —'அகில உலக மாணவர் தியான சபை'—'அகில உலக தியான சபை'— 'அறிவியக்க விஞ்ஞான சபை' — 'மகரிஷி பல்கலைக் கழகம்' — போன்ற பல நிறுவனங்களையும் இயக்கி வருகிறர் மகேஷ்யோகி

அவைகளை நிர்வகிப்பது அவருடைய உறவினர்களே. வேறு யாரிடமும் பொறுப்பை ஒப்படைக்க அவர் தயாராக இல்லை. (முற்றுந் துறந்த முனிபுங்கவரின் 'குடும்ப பாசம்' பார்த்தீர்களா) அவருடைய 'இயக்கங்கள்'—சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, சுவீடன், டென்மார்க், 'பிரான்சு, அமெரிக்கா — போன்ற நாடுகளிலும் செயல்படுகின்றன.

இவைகளைப் பராமரிக்கத் தேவைப்படும் ஏராளமான பணம் மகேஷ்யோகிக்கு எங்கிருந்து எப்படி கிடைக்கிறது என்ற 'கேள்விக்கான முழுமையான பதில் இன்னும கிடைக்கவில்லை.

—ஆனல் மகேஷ்யோகியின் மீது அரசு 'கண்' வைத்ததுமே அவர் சுவிட்சர்லாந்துக்கு இப்போதுஓடிவிட்டார்.

—அடுத்து 'பாபா'க்கள் 'சுவாமி'ஜீக்கள் ஆகியோரின் 'இருண்ட' வாழ்க்கையைச் சற்று 'வெளிச்சத்தில் பார்ப்போம்.

(தொடரும்)

சிந்தித்தது போதும் செயல் படுவீர்!

திராவிடர் இயக்கங்களாம் தி. க வும் தி. மு க.-வும் தியாகத் தீயில் தம்மையே எரியும் பொருளாக ஆக்கிக் கொண்டு தமிழ் இனத்தைச் சேர்ந்த இருளை நீக்கிட முயன்றன; முயலுகின்றனர்.

ஆனாலும் இந்த இனம் அடைய வேண்டிய உணர்வுகளை அடைய வேண்டிய அளவிற்கு அடைந்ததா?

பெற வேண்டிய பெருமைகளை பெற வேண்டிய அளவிற்குப் பெற்றதா?

'அய்யோ, இல்லையே!' என்று அழ வேண்டிய நிலையில் தானே நாடு உள்ளது!

தந்தை பெரியார்!

பேரறிஞர் அண்ணா என்னும் இருபெரும் சமுதாய மேதைகளைப் பெற்ற சரித்திரத்திற்குரியவர்கள் என்று பெருமை பேசிக் கொள்ளுகிறோம். அந்தப் பெறற்கரிய பெருஞ் சொத்துக்களால் நாம் பெற வேண்டியனவற்றை எல்லாம் பெற்றோமா?

உறுதியாகப் பெற்றோம் என்று உடல் நிமிர்த்திக் கூறுமளவிற்கு நாம் இருக்கின்றோமா?

இராமாயணத்தில் வரும் கும்பகர்ணன் என்னும் பாத்திரத்தின் உருவகமாக அன்றோ தமிழ்க்குலம் வாழ்ந்து வருகிறது.

ஏன் இந்த நிலை? என்று இன்றும் கூடச் சிந்திக்கிறோம்! 'ஏன் இந்த நிலை?' என்று என்றைக்கு இந்த இனம் சிந்தித்ததோ அன்றைக்கே விடை கிடைத்தது!

காரணம் கிடைத்தபோதே அவற்றைக் களையாமல் போனதால் மீண்டும் சிந்தித்தோம்!

மீண்டும் விடைகிடைத்தது'

இந்தக் காரணத்தினால் இந்த கதி என்று காரணம் கிடைத்த அப்போதும் அவற்றைக் களையாமல் போனதால் மீண்டும் மீண்டும் சிந்தித்தோம்.

'ஆம்!

சிந்திப்பதில் மட்டுமே இன்பம் கண்டோமே தவிர காரணங்களைக் களத்திலே சந்திக்க அஞ்சிக் கிடந்தோம்!

அதன் விளைவு...!

இன்றும் சிந்திக்க வேண்டிய நிலை!

எது பகையென்று எப்போதுமே சிந்தித்துக் கொண்டே இருந்தால், களத்தில் அந்தப் பகையைச் சந்திப்பது எப்போது?

அதனால் என்ன...!

அதைப்பற்றி இப்போது சிந்திப்போமா?'

இப்படி ஒரு எண்ணம் எழுகிறவரை இந்தச் சமுதாயத்திற்கு எதிர் காலம் பகையாகவே இருக்கும்!

சினிமாவில் நடித்தவரைச் 'சீப்-மினிஸ்டர்' ஆக்கும் அளவுக்கு ஒரு இனம் இருக்கிறதே என்று உலகமே நம்மைப் பார்த்துச் சிந்தித்துச் சிரிக்கும் இந்தக் காலத்திலும் சந்திக்க வேண்டிய பகையினைச் சந்திக்க மறுக்கிறோம் நாம்.

புருஷன்....

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

கொண்டிருக்கும்

அணைக்கட்டுத் தொழிலாளர்களுக்கு அன்று ஒரு திருவிழா. அந்த விழா அவர்களாகவே உண்டாக்கிக்கொண்டது. பொழுது போக்குக்கு வகையற்ற வனுந்தரப் பகுதியில் மாதக்கணக்கில்குடியிருக்கும் தங்களது மனைவி மக்களுக்கு உவகையூட்டுவதற்காகக் கூட்டுப் பொறுப்பில் அந்த விழா ஏற்பாடாயிற்று. தெருக்கூத்து, கரகம், குடைராட்டினம் எல்லாமே வரவழைக்கப்பட்டிருந்தன. உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, தேவதானம், பெரியகுளம், வத்தலக்குண்டு எல்லா இடங்களிலிருந்தும் வேடிக்கை பார்க்கக்கூட்டம் திரண்டுவந்திருந்தது. சக்குபாய் டீ ஸ்டாலில் நகர முடியாத கூட்டம். வியர்க்க, வியர்க்க டீ அடித்துக்கொண்டிருந்த குருவம்மா மருண்ட மானைப்போல் திடீரென்று வெறிக்கப்பார்த்தாள் செந்தூரான் புதியசட்டையும், வேட்டியும் உடுத்தி தலையில் வாசனைத் தைலம் தடவி சிகரெட் பிடித்துக் கொண்டு வந்தான்

வரட்டும... வரட்டும்! இங்கேதான் வர்ருரு வரட்டும்'...'வாங்க தம்பி!' குருவம்மா வியாபாரத்தோரணையில் வரவேற்றாள்.

குருவம்மா இப்படி வரவேற்பாள் என்று செந்தூரான் கொஞ்சமும்எதிர்பார்க்கவில்லை ஆகவே குருவம்மாவின் வரவேற்பை மிகவும் சிரமப்பட்டு ஏற்றுக்கொண்டு உள்ளே நுழைய முதலடி எடுத்துவைத்தான் அவ்வளவுதான்! அடுத்த கணம் தீச்சுட்டவனைப்போல அந்தக் காலை உதறிவிட்டு அப்படியே சிலைபோல் நின்றான். தலையில் உத்தரம் இடித்துவிட்டதா? மாரடைப்புக்கண்டு மூச்சு நின்றுவிட்டதா? ஏன் அவன் அப்படி உக்கி உடல் குறுகி நிற்க வேண்டும்?

அவன் எதிர்பாராதது அங்கே நடந்திருந்தது

போக்கிரிப் பொன்னையா கல்லாவில் உட்கார்ந்திருந்தான்.

(தொடரும்)

தென்னைகள்

அதன் விளைவு.'

தினமணி புறநானூற்று ஆராய்ச்சி நடத்துகிறது

அகநானூற்று ஆராய்ச்சி நடத்தப்போவதாக அறிவிப்பைத் தருகிறது.

தமிழர்கள்உப்பைப்போட்டுத்தான் சாப்பிடுகிறார்களா என்று உண்மையான ஆராய்ச்சிக்குத் தினமணி செல்கிறது என்னும் உண்மையை இன்னும் தமிழினம் உணர்ந்து கொண்டு எழவில்லையானால்,

'தமிழினம் என்று ஒன்று இருந்தது' என்னும் காலம் வந்தே தீரும்!

தூங்கிக் கிடக்கும் தமிழ்க் குலத்தைத் தட்டி எழுப்பிடவும், உலக இலக்கிய அரங்கில் ஈடும் எடுப்பும் மிக்க மிடுக்கோடு தமிழ்க் குலம் இருக்கிறது என்றுஎடுத்துக்காட்டிடவும், மொழி, இனத்தின் பழம் பெருமைக்கு ஆதாரமாக எடுத்துக் கூறிடவும்,

படைக்கலமாகவும்,

மறுக்க முடியாத சான்றாகவும் இன்றுவரை நின்று நிலவும் சங்க இலக்கியமாம் மங்காத முடியில் மாணிக்கச் சுடராக விளங்கிடும் புறநானூற்றுக் கருத்துக்களைப் புன்மைப் படுத்த தினமணிக்குத் துணிவு எப்படி ஏற்பட்டது?

ஆட்சி செய்பவர்களுக்கு அறிவுரை கூறும் 'அந்தரங்க உறவுதான் இதற்கெல்லாம் முதற்காரணம் என்பதை முதலில் தமிழ்க்குலம் உணர்ந்து கொள்ளவேண்டும்!

காமராஜர்காலத்திலிருந்து கலைஞர் காலம்வரை அடக்கப்பட்டிருந்த 'அவர்களின்' ஆசைகள், ஆளும்புரட்சிகளின் துணையோடு பீறிட்டுக் கிளம்பி வருகிறது என்பதை இந்தக் கால கட்டத்திலாவது தேசியத் தமிழர்களில் இருந்து 'பாசிசம்' பேசும் தமிழர்கள் வரை புரிந்து கொள்ளவேண்டும்!

அந்தக்காலத் தமிழ் மன்னர்கள் 'நறவு குடித்தார்கள் என்று

சுரபானம் அருந்திய 'சுரர்'களின் பரம்பரை நம் இனமானத்தில் சூடு போட வருகிறது!

வேத, இதிகாச, புராணங்கள். தேவாதி தேவர்களும், மூவர்களும் மது அருந்தி மதி கெட்டதைக் குறிப்பிடுவதை மறந்து 'குல தர்மவாதகள்' தமிழ்க்குலப் பெருமையைத் தகர்க்க முயல்கிறார்கள்

'பாரதச் சண்டையினைப் பாராட்டி மகிழ்பவர்கள், தமிழ் மன்னர்கள் தங்களுக்குள் தாங்களே போரிட்டுக் கொண்டது குற்றம் என்று கூறி நம்மினத்தைக் குறைவு படுத்திக் குதிக்கின்றார்கள்.

காரணம் பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருப்போமே தவிர, களத்தில் சந்திக்கமாட்டோம் என்ற நம்பிக்கை நச்சு மனத்தார்க்குநாளும்வளர்ந்து வருகிறது.

அகநானூறு பற்றி ஆராயப் போகின்றார்களாம்! ஆராயட்டும்; அலசி அலசி ஆராயட்டும்!

அதற்கு முன்,

ஐவருக்கும் தேவியினை அழியாதபத்தினியாக்கிய' அதிசய நினைப்போடு ஆராய முன் வரட்டும்!

ஆளுக்கொரு பிள்ளையைப் பெற்று, ஐவருக்கும் தாயான குந்திதேவியை ஆராய்ந்து பார்த்தபிறகு அகநானூற்றை ஆராய முன் வரட்டும்!

இந்திரனோடு இன்பம் அனுபவித்த ரிஷி பத்தினிகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து தெரிந்து, முடிவெடுத்த பிறகு அகநானூற்றை ஆராய முன் வரட்டும்!

கோபியர் கண்ணன் கோலாகலங்களைப்பற்றி யெல்லாம் ஆராய்ந்து பார்த்து அனுபவித்த பிறகு அகநானூற்றை ஆராய முன் வரட்டும்.

குனியக் குனியக் குட்டுபவர்களைப் பார்த்து

குட்டக் குட்டக் குனிந்த இனம் நிமிர்ந்து நின்று நெருப்பு விழிகளைக் காட்ட வேண்டிய காலம் நெருங்கி விட்டது!

அப்போது

சிந்திப்பவர்கள் இருக்க மாட்டார்கள்.

மதத் தலைவர்களின் நில ஆக்கிரமிப்புகள்!

மன்னர்களும், 'ஜமீன்தார்'களும் இந்தியாவை ஆண்டிருந்தபோது ஏராளமான நிலங்களை மதத் தலைவர்களுக்கு மான்யங்களாக வழங்கினார்கள். அதுபோக தங்களின் அடியாட்களை வைத்து ஏழை மக்களின் அக்கம் பக்கத்து நிலங்களையும் மதத் தலைவர்கள் ஆக்கிரமித்து வந்தார்கள். இந்தியா விடுதலை அடைந்து முப்பதாண்டுகள் ஆனபிறகும் அந் நிலங்கள் அவர்களிடமிருந்து மீட்கப்படவில்லை என்றால் - அதற்காக வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா?

பீகார் மாநிலத்தில் கயா மாவட்டத்திலிருக்கும் 'போத்கயா மாத்'தில் கோயிலின் பேரால் ஒரு மதத் தலைவர் ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலத்திற்கு உடமையாளராக இருக்கிறார்; அந்நிலங்கள் சரியாகப் பராமரிக்கப் படாது தரிசுகளாகிக் கொண்டிருக்கின்றன; ஒரு பிடி சோற்றுக்கும் வழியற்றவர்களாகவும் ஏராளமான உழவர்கள் கையகல நிலத்திற்கும் வகையற்றவர்களாகவும் இருக்கும் இந்தியாவில் தான் இந்த நிலை!

மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், தமிழகம்- எல்லா மாநிலங்களிலும் இதே கதைதான்... கோயில் நிலங்களில் வேலை பார்க்கும் உழவர்களுக்கு அரசாங்கம் நிர்ணயத்திருக்கும் குறைந்த பட்சக் கூலி கூடத் தரப்படுவதில்லை. கூலி உயர்வு கேட்பவர்களை கோயில் நிர்வாகிகள் நிலப்பிரபுக்கள் பாணியில் அடியாட்களை வைத்து அடித்து மிரட்டுகிறார்கள்

அண்மையில் கூலியை உயர்த்தும்படி கேட்டுப் போராட்டம் நடத்திய உழவர்களில் நான்கு பேர்கள் பீகார் மாநிலத்தில் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள்.

மதத் தலைவர்களின் பிடியிலிருந்து நிலங்களை மீட்டு அவைகளை நிலமற்ற உழவர்களுக்குத் தர அரசு முன்வருமா?

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ணா மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

'தினமணி'யும் புறநானூறும்!

புலவர் கோ. அண்ணாமலை எம். ஏ.

"விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன் நாளை எடுத்து"–என்பார் வள்ளுவர்!

"தொண்ணூறும் ஆறும் படுதழும்பின் ஆகத்தோன்" என்று விஜயாலய சோழன்-சோழப் பேரரசை மீண்டும் முறைநிறுவியவன், பாராட்டப்படுகின்றான். மார்பிலேயும் உடம்பின் முன் பகுதிகளிலேயும் தொண்ணூற்றாறு முறை காயம் பட்டான், விஜயாலய சோழன் என்பதனை மூவருலா என்னும் நூல் எடுத்துக்காட்டுகிறது'

இரண்டு தரப்பாரும் ஏற்றுக்கொண்டு, இடமும், நேரமும் குறித்து எதுவரினும் ஏற்கத்தயார் என்ற உறுதியோடு சடுபடுகிறபோது 'கொடுமை' என்பதற்கு என்ன இருக்கிறது?

மற்றவர் அதனைக் கொடுமை என்று வர்ணிப்பதைக்கூட — கொடுமைக்கு ஆளானோர் விரும்பிடுவதில்லை. தமக்குக் கிடைத்த 'பெருமை, என்றே அதனை வர்ணித்திட வேண்டுமென்று விரும்பியவர்கள்—அதற்காகவே வாழ்ந்தவர்கள்!

எது இதுவரை தமிழர்களால் பெருமை என்று கருதப்பட்டதோ அதனைக் கொடுமை என்று எழுதிக் காட்டிடத் தினமணி துணிந்ததற்குக் காரணம் அறியாமையினால் ஏற்பட்டதன்று.

"கரிகாலன் முதல் கலைஞர்

3

வரை, செங்குட்டுவன் முதல் பேராசிரியர் வரை,

எந்தத் தமிழனையும் களங்கப்படுத்தாமல் விட்டுவைக்கக் கூடாது என்கிற எரிச்சலின் விளைவு இது" என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது!

அடுத்து, சோழன் நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடுகிறார். அதிலும் முழுப் பாட்டினையும் எடுத்துக் கொண்டு தினமணி ஆராயவில்லை! பாதியை எடுத்துக் கொண்டு மீதியைத் தனக்கு வசதியாக இருக்கும்பொருட்டு விட்டுவிட்டது!

சோழன் நலங்கிள்ளியைப் பாராட்டவந்தகோவூர்கிழார்–இல்லாததைச் சொல்லிக்கூட அல்ல — உள்ளதை உள்ளபடியே சொல்லிப் பாராட்ட எண்ணிய கோவூர் கிழார் ஓர் உவமையைச் சொல்கிறார். என்ன உவமை?

"அறம், பொருள், இன்பம் என்னும் இம்மூன்று இன்றியமையாதவையே என்றாலும், அறம் முதன்மையானதாகவும் பொருளும் இன்பமும் அதற்குப் பிற்பட்டவைகளாகவும் கருதப்படுவதைப் போல,'

சேர சோழ பாண்டியர் என்னும் மூவரும் வேந்தரேயானாலும், சோழனே, உனக்குப் பின்னால்தான் அவர்கள் இருவரும்! என்கிறார் கோவூர் கிழார்.

கோவூர் கிழார் சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது கோபம் வருகிறது. தினமணிக்கு! 'எப்படிச் சொல்லலாம் அந்த உண்மையை?' கேட்கிறது தினமணி.

"தம்முட் சரிநிகர் சமானமாகி ஒருமைப்பாடு பூணவேண்டிய மூவருள், சோழன் நலங்கிள்ளிக்கு முதன்மையும், மற்றை இருவர்க்கும் அவனை வழிப்படுவதாகிய இளிவரலும் கற்பிக்க அன்றோ அந்த உவமை கையாளப்படுகிறது" என்று கோவூர் கிழாரைக் கோபித்துக் கொள்கிறது, தினமணி!

'சரிநிகர் சமானம்' என்பதை அந்த மூவரிலே யாராவது ஒப்புக் கொண்டிருந்திருப்பார்களா என்பது வேறு விவகாரம்!

இரண்டு பேரைவிட நலங்கிள்ளியை மேலானவன் என்று பாராட்ட—புகழ, காரணமில்லாமலில்லை.

பாதிப் பாடலைப் படித்த தினமணி மீதிப்பாடலையும் ஒழுங்காகப் படிக்கவேண்டும்! மீதிப்பாடலின் கருத்து இது:

"நல்ல புகழை விரும்பி நீ போர்க்களத்திலேயே இருக்கின்றாய்! உன் நகருக்கு நீ வருவதில்லை!

தந்தங்களின் கூர் மழுங்கப் பகைவர்களின் காவல் மதிலைக் குத்திப்பிளக்கும் உன் களிறுகளோ அடங்க மறுக்கின்றன

போர் என்று கேட்டவுடனேயே விருப்பமும் ஆவலும் கொண்டு கிளர்ந்தெழும் உன் வீரர்கள், பகைவர் நாடு வெகு தொலைவிலே இருக்கிறதே என்று அங்குச் செல்ல தயங்குவோர் அல்லர்!

கீழ்க்கடல் பின்பாகவும் மேற்கடல் முன்பாகம் சுற்றிக் கொண்டு வடதிசையிலும் வலம்வரும் உன்னுடைய வெற்றிமிக்கக் குதிரைப்படை என்று வடபுலத்து அரசர் எல்லாம் துயிலாதகண்ணையுடையவர்களானார்கள்!

"...அலமந்து நெஞ்சு நடுங்கு அவலம் பாயத் துஞ்சாக் கண்ண வடபுலத்தரசே"

"அல்லலுற்று, நெஞ்சு நடுங்கும் அவலம் மிக உறங்காத கண்களை உடையவாயின வடபுலத்திலே இருக்கின்ற அரசுகள்" என்று கூறுவதிலிருந்து நலங்கிள்ளி, மற்ற சேர பாண்டியரை விடச் சிறந்தவன் என்பதைக் காரணத்தோடு கோவூர் கிழார் நிறுவிக் காட்டவில்லையா? வடபுலத்து அரசர்களை அல்லலுற்று நெஞ்சு நடுங்குகிறார்கள், அவலம் கொள்கிறார்கள்: உறங்காத கண்களை உடையவர்களாகிறார்கள் என்றால், அதிலிருந்து மூவேந்தர்களிலும் முதன்மையாக மதிக்கத்தக்கவனாய் நலங்கிள்ளி இருந்தது விளங்கவில்லையா?

நலங்கிள்ளியைப் பாண்டியன், சேரன் ஆகியவரைவிடச் சிறந்தவன் என்று கோவூர் கிழார் பாராட்டும்போது, தமிழர்களுக்கே கூட வராத எரிச்சல், தினமணிக்கு வருவதற்குக் காரணம இப்போது புரிந்திடும்!

நலங்கிள்ளி, கலைஞர் அவர்களைப்போல, அந்தக் காலத்தில் வடபுலத்தரசர்களுக்கு உறக்கம வாராமல் செய்து கொண்டிருந்த ஆற்றலாளன் என்பதனால், கோவூர் கிழார் பாராட்டைத் தினமணியால் தாளமுடியவில்லை.

இந்திரஜித்...

(7–ம் பக்கத் தொடர்ச்சி)

அழல்போல் கண்கள் தோற்ற மளித்திட
ஆயிரம் ஆனைப்பலமுடன் எதிர்த்தான்—
கோபுரம் ஒன்று நடப்பதுபோலக்
குன்றம் ஒன்று அசைவதுபோலப்
புயலெனச் சீறிப் பொங்கு கடலாய் வந்தான்—
கயல்விழி மாதிடம் கனிவுபேசிடும் கண்களோ அவைகள்?
அயலவர் மரபை அறவே அழித்திடும்
அனல் பொறி அவைகள்!
தங்கச் சிலையைத் தழுவிடும் கரமோ?
தறுக்கர் தலையைக் கொய்திடும் கரமே!
எங்கும் அவனே; எதிலும் அவனே!
சங்குல் கிழிக்கும் கதிரும் அவனே!
போர் முடித்து ராமனின் தலையறுக்கும் நேரம்
தேர்ப்பாகன் சதியும் தொடங்கியது உடனே!
சக்கரங்கள் அச்சாணி காணவில்லை—
அக்கணமே தேர்த்தட்டு சாய்ந்து வீழ
பதறிப் பாய்ந்தன குதிரைகள் நான்கும்!
சிதறித் தெறித்தன கடைக்கால் முழுவதும்!
வஞ்சகத்தில் வீழ்ந்து விட்டான் மேகநாதன்—
நஞ்சுமன விடணனும் அவன்கை நறுக்கி விட்டான்,
சிறறப்பன் செய்திட்ட துரோகத்தை
எண்ணிடவும் நேரமில்லை—இருகரமும்
ரத்தப் பிரவாகமுடன் யுத்தம் செய்தான்!
சுட்டிதனை வாயில் கௌவி எதிரிகளை வாட்டுகின்றான்!
கூட்டமாகப் பகைவரெல்லாம் குழுமிவிட்டார்—
குமரன் முன்னே!
இருகரமும் இழந்த நிலையில்
பரபரெனப் போராடும் ஆற்றல் தனைப்
பகைவரும் போற்றுகின்றார்—
பாவி விடணன் ஒருவன் தவிர!
வேலாலே கணையாலே பகை வீழ்த்த முடியாமல்
காலாலே தலையாலே பலர் உயிரை மொண்டுவிட்டான்!

ஃ ஃ ஃ

போர்க்களத்தில் அத்தானின் கை அறுந்ததெனப்
பூங்கொடியாள் சுலோச்சனையும் தெரிந்துகொண்டாள்—
'தாவி அணைக்கின்ற கரமெங்கே?
பாவிநான் எப்படித்தான் காண்பேனோ அத்தானை',
எனப்புலம்பி ஓடி வந்தாள்!
தனியொருவன் ஆயிரம்பேர் நடுநின்று
தமிழ்வீரம் காட்டுகின்ற காட்சி கண்டாள்!
'அத்தான்' என்றாள் — 'அன்பே' என்றான் —
சற்று அயர்ந்தான்!
அப்போது இலக்குவனும் பெருங்கோழை
தப்பாது கணையொன்றைத் தொடுத்து விட்டான் —
'தாய்நாடு வாழ்க' எனும் ஒலியோடு
பாயில்லாக் கலம்போலப் போர்க்களத்தில் அசைந்தான்
எப்போதோ பழிநினைத்த இழிகுலத்தான் நாகநாட்டான்
இப்போது தீர்த்துக் கொண்டான் தலையறுத்துப்
பழைய வஞ்சம்!
'பைந்தமிழர் பொன்னேட்டில் இடம் பெற்றேன்;
பைங்கிளியே வருகின்றேன்' எனக்கூறித்
தலைமட்டும் அலர்கையில் விழுந்துவிட,
விலைமதியா இரத்தினமாம் சுலோச்சனையும்
செத்துவிட்டாள்!
'எனக்கு,
வேறு உயிரில்லை போரில் இழப்பதற்கு' — எனக்
கூறிச் சாய்ந்துவிட்டான் இலங்கை வேந்தன் —
ஆனன் இறந்த பின்னர் இறப்பதற்கு மட்டுத்தான்
நின் இமையைத் திறந்திட்டான் மண்டோதரி.

சோதனை நெருப்பிலும் சுடர்விட்டு ஒளிதரும்
தமிழினத் தலைவர் கலைஞர்
அவர்களைப் பற்றி
கவிஞர் மணிமொழி எழுதிய
கவிதை நடைச் சொல்லோவியம்

உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்!

கழகப் பொதுச் செயலாளர்
பேராசிரியர் முன்னுரையுடன்
விலை ரூபாய் 2
—விவரங்களுக்கு—
கலை பப்ளிகேஷன்ஸ்
179 பீட்டர்ஸ் காலனி சென்னை – 14

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்
எஸ். காவிமுத்து
R.M.P. (IND. V. V. C. A. I. H.)
பழனி — 624601
என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்.
போன்: 316, 316 ஏ, 420 தந்தி: சித்தர்

கருத்துக் குருடர்க்குச் சிறுவிளக்கம்!

'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆபாசக் கவிஞர் — இப்படிக் கூறுபவர் யார தெரியுமா? முற்கால இலக்கியங்களையும், தற்கால இலக்கியங்களையும் பிரிந்துப் பார்த்து (படிக்காமலே) எம். ஏ பட்டம் பெற்றவர் மூன்ருண்டுக்காலம் தான் படித்த கல்லூரியில் ஆசிரியராக இருந்து 'கு' வை கொட்டியவர் தற்காலக் கவிதைகளைப்பற்றி பிஎச்டி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் புதுக்கவிஞர்! ஆம். தனது பெயரிலேயே ஆபாசத்தை வைத்துக் கொண்டிருப்பவர்தான் பாரதிதாசன் ஓர் ஆபாசக் கவிஞர் என்று கண்டுபிடித்திருக்கிருர். கண்டுபிடித்ததோடு விட்டுவிடவில்லை. அதனை துணிந்து ஒரு கூட்டத்தில் பேசியும் இருக்கிருராம்; அந்தப் பேச்சை எடுத்து குமுதம பெட்டிச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது. அது மட்டுமல்ல பாவேந்தர் ஆபாச கவிஞர்தான் என்பதற்கான சான்றுகளை 22—6—78 இதழில் வெளியிட்டு அவரது புகைப்படத்தையும போட்டு அடையாளம் காட்டியிருக்கிறது.

தமிழைப்பற்றி—தமிழ்ச் சமுதாயத்தைப்பற்றி — தமிழ் இனத்தைபபற்றி — தமிழ்ப் பகைவர்களைப பற்றியெல்லாம் அவர் பாடிய கருத்துகளை விட்டுவிட்டு, அவர் ஆபாசக் கவிஞர் எனக் கண்டு பிடித்து விட்டதாகக் கூறுவானேன்?

அதைக் குமுதம் வெளியீட்டுப் பறை சாற்றுவதேன்!

அண்மைக் காலமாக தமிழ் இனததை. தமிழ்ப் பண்பாட்டைப் பழிப்பதற்கென்றே ஒரு கூட்டம் முனைந்திருக்கிறது

ஆவக்காய், ஊறுகாய் கதைகளைப்போட்டு பிழைப்பு நடத்தும் குமுதம்கூட பாரதிதாசன் ஆபாசக் கவிஞர் இல்லை என்று கேள்வி-பதிலில் சொல்லிவிட்டது என்ருலும் அரைவேக்காட்டிற்குப் பதில் சொல்லக் கடமைபட்டிருக்கிருேம்.

ஆபாசம் என்ருல் என்ன?

இதோ அரைவேக்காடு எடுத்துக் காட்டியிருக்கும் பாரதிதாசன் வரிகளைப் பார்ப்போம்.

ஒதிய மரத்தின் கீழே
முத்துமாமா — கோழி
ஒன்றையொன்று பார்ப்ப
தென்ன முத்துமாமா
எது செய்ய நினைத்தனவோ
முத்துமாமா — நாமும்
அது செய்ய அட்டியென்ன
முத்துமாமா

— இது ஆபாசமாம்

காதலி தனது உள்ளக் கிளர்ச்சியை வெளிப்படுத்துவதை உவமை நயத்தோடு எடுத்துக்கூறும் அந்தவரிகளில் என்ன ஆபாசம் இருக்கிறது!

இது ஆபாசம்என்று சொன்ஞல் கலிங்கத்துப் பரணியில் கடைதிறப்புப் பகுதி ஆபாசமில்லையா? அதை எப்படி பாடமாகவைத்திருக்கிருர்கள் அப்படியாஞல் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் ஜெயங்கொண்டானும் ஆபாசக் கவிஞர் தானே?

ஏன் — அகநானூறும். ஐங்குறுநூறும். கலித்தொகையும். குறுந்தொகையும் ஆபாச நூல்கள்தாமே!

இவைகளுக்கெல்லாம் அவரிடமிருந்து நாம் பதில் எதிர்பார்க்கவும் இல்லை. ஆபாசம் என்ருல் பொருள் புரியாத நிலையிலும் இல்லை.

அவர் கூற்றுப்படி ஆபாசம் என ஒதுக்கித்தள்ள முனைந்தால் நமக்கு எந்த நூல் மிஞ்சும் என்று கருதுகிறீர்கள்.

பின் ஏன் பாவேந்தரைப் பற்றிய புதிய கண்டுபிடிப்பு?

தி மு க. இலக்கிய அணி சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாள் விழா தமிழகமெங்கும் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டதும. பாவேந்தர் விழாவும், இலக்கிய அணி தொடக்க விழாவும் தமிழ் இனத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றதும் நாடறிந்ததே.

அந்த விழாவில் கலைஞர் அவர்கள் பேசிய பேச்சும், 'நம்நாடு' இதழில் 'இன்னுமா இன அழிப்பு வேலை! உணர்வு படைத்தோர் உடன் செயல் படுக' என உடன் பிறப்புக்கு எழுதிய மடலும் தமிழ்பபகைவர்களின் உள்ளங்களைச் சுட்டெரித்திருக்கிறது. அதன் விளைவு புரட்சிக் கவிஞரை இழிவுபடுத்தும் பணி 'கறுப்பு மலர்கள்' கவிஞனிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

அடுத்து அந்தக் கவிஞர் எடுத்துக் காட்டும் பாரதிதாசன் வரிகளைப்பார்ப்போம.

'புன்னைமரப் பந்தர் ஒன்றே
புன்னையின் கீழ்த்திண்ணை
ஒன்றே
இன்னுன்றே என்ருன்
அன்பன்
இட்டமுத்தம் இருபத்
தொன்றே'

— இட்டமுத்தம் இருபத்தொன்றே என்று பாடி முத்தமிழ் வாத்தியார் கனக சுப்புரத்தினம் முத்தக்கணக்கு வாத்தியார் ஆகிருர்—என்று கிண்டல் செய்கிருர். என்ன துணிச்சல்

அடுத்து,
'என் ஒளி இதழ் அடையுமா?
அவன் முத்துப்பல்லை'

— என்று பாடுவது ஆபாசமில்லையா? என்ற கேள்விக்கணையோடு நிறுத்திக்கொண்டார். அதற்குமேல் அவரால் சான்றுகள் காட்ட முடியவில்லையோ தேட முடியவில்லையோ அதைப்பற்றி நமக்குக் கவலை.

முத்தமிடுவதும் — முத்துப் பல்லை அடையுமா ஒளி இதழ் எனப் படுவதும் ஆபாசமாம். முத்தமிழ் வாத்தியார் முத்தக் கணக்கு வாத்தியார் ஆகிருர், என்று கிண்டல் வேறு.

முத்தமிடுவது ஆபாசம் என்ருல் கன்னத்தில் முத்தமிட்டால் கண்ணம்மா கள் வெறி கொள்ளுதடி—என்று பாடிய பாரதியும் ஆபாசக் கவிஞர்தானே!

சொல்லட்டுமே நைக் கூலி! போடட்டுமே சாக்கடைக் குமுதம்.

காதலுக்கு அச்சாரமே முத்தம் அந்தக் காதலைப்பற்றிப் பாடுகின்ற போது முத்தத்தைப் பற்றிப் பாடாத கவிஞர் உண்டா?

இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற கவிஞர் என அறிஞர்களால் பாராட்டப்படும் புரட்சிக் கவிஞரை குறை குடமா கிண்டல் செய்வது!

புதுக்கவிதைகள் எழுதும் எது எதுகளோ புரட்சிக்கவிஞரின் பாடல்களைப் புரிந்து கொள்ளாமல் குற்றம் சொல்

- நெ. அ. பூபதி

வதையும் கிண்டல்செய்வதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள். பதிலடி கொடுக்கத் தயங்க மாட்டார்கள், பாவேந்தர் பரம்பரையிலே வந்தவர்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிருேம்.

ஆபாசம் என்ற சொல்லுக்கே பொருள் புரியாமல் எப்படித்தான் எம் ஏ பட்டம் பெற்ருரோ அது அவருக்குத் தான் வெளிச்சம்.

அரங்கமேறி ஆடுகிருள் பருவமங்கை அவள் ஆடுவதை கலை உணர்வோடு ரசிக்க வேண்டுமே தவிர ஆபாசக் கண்கொண்டா பார்ப்பது? அங்க அசைவுகளைக் கண்டு பார்...பார் ஆபாசமாக இருக்கிறது. என்று சொன்ஞல் என்ன பொருள்? ஒன்று அவன் கலை உணர்வு அற்றவனாக இருக்க வேண்டும் அல்லது கருத்துக் குருடனாக இருக்க வேண்டும்;

கவிதையை எடுத்துக் கொண்டால் அதில் உள்ள நயத்தையும், உவமையையும். சொல்லாட்சியையும் கண்டு ரசிக்க வேண்டும்—பாராட்ட வேண்டுமே தவிர அதிலே அசிங்கம் இருக்கிறது; ஆபாசம் இருக்கிறது என்று சொன்ஞல் மேலே குறிப்பிட்டதுபோல் ஒன்று கவிதை உணர்வு அற்றவனாக இருக்க வேண்டும் அல்லது கருத்துக் குருடனாக இருக்க வேண்டும்!

பாவேந்தர் பாடலில் ஆபாசத்தைக் கண்டுபிடிக்கும் அந்தக் கருத்துக் குருடர் முதவில் தனது பெயரை மாற்றிக் கொள்ளட்டும் —பிறகு ஆபாசத்தைப்பற்றி தனியே ஆராய்ச்சி செய்து பட்டம் பெறட்டும்.

சோஷலிசத்தை எதிர்க்கும் சீனமுதலாளிகள்

வட வியட்நாம்-தென் வியட்நாம் என நெடுங்காலமாக இருகூருக்கப்பட்டிருந்த வியட்நாம் அண்மையில்தான் ஒரே வியட்நாம்ஆனது!

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை வீரமுடன் முறியடித்த மக்கள் வாழ்க்கையை முன்னேற்ற இன்றைய வியட்நாம் அரசு சோஷலிசத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

வெளிநாட்டுக்காரர்கள், உள்நாட்டுக்காரர்கள் ஆகியோருக்குச் சொந்தமான பெரிய நிறுவனங்களையும், பண்ணைகளையும் வியட்நாம் அரசு நாட்டுடமை ஆக்கியுள்ளது.

வியட்நாமில் வாழ்ந்துவரும் சீன நிலப்பிரபுக்களும், பெரும் முதலாளிகளும் அரசின் இந்த சோஷலிசத் திட்டங்களை 'சீனக் குடியினருக்கு விரோதமானது' என கண்டித்து வருகிருர்கள்.

ஆனல் — வியட்நாமில் வாழும் உழைக்கும் சீனர்கள் அரசின் சோஷலிசத் திட்டங்களை மனப்பூர்வமாக வரவேற்கிருர்கள்.

வியட்நாமில் வாழும் சீன முதலாளிகளுக்கு 'வக்காலத்து' வாங்கி அவர்களைத் தூண்டிவிடும் சீன அரசு, வியட்நாமுக்கு அளித்துவந்த உதவிகளை இப்போது நிறுத்திக்கொண்டது!

ஒரு விந்தையான மூடநம்பிக்கை!

மனித இனம். வளர்ச்சி, தோற்றம் பற்றிய ஆராய்ச்சி நிபுணர் மலனேவிஸ்லி பசிபிக் தீவுகளின் பழங்குடி மக்களினத்தைசேர்ந்த டிராபிரியண்டர்'களைப் பற்றிய சுவைமிக்க செய்திகளை வெளியிட்டுள்ளார்.

மணமான பின் கணவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து மூன்று அல்லது நான்கு ஆண்டுகாலம் படகில் பயணம் செய்துகொண்டே இருப்பான். கணவன் வீடு திரும்பும் பொழுது மனைவி ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட குழந்தைகளைப்பெற்றிருப்பதைக் காண்பான்; ஆனல், அது குறித்து மனைவியிடம் எதுவும் கேட்கமாட்டான்! காரணம். உடல் உறவுக்கும் குழந்தை பிறப்பதற்கும் தொடர்பு இல்லை என்று அவன் நினைப்பதுதான்! ஏதோ ஒரு குழந்தையின் ஆவி பெண்களின் உடலுக்குள் புகுந்து கொள்வதால்தான் அவர்களுக்குக் கர்ப்பம் உண்டாகின்றது என்று அம்மக்கள் நம்புகிருர்கள்.

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

கலைஞர் கடிதம். . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்திற்காக மிசாக் கைதிகளாக ஓராண்டுக் காலம் சிறையில் கிடந்த தியாகமறவர்கள் பலரும் இந்தப் பேரவையின் அங்கங்களாகத் திகழ்கிறார்கள். அன்றைக்கு அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வீழ்த்திட அணிவகுத்து அடக்குமுறைகளை ஏற்றுக் கொண்ட நமது முன்னேற்றச் சங்கப் பேரவை இன்றைக்கு இந்த அவசரச் சட்டத்தை வீழ்த்திட ஒருக்காலும் தயங்காது! ஆர்ப்பரித்துக் கிளம்பி விட்டது! பாட்டாளி வர்க்கத்தைப் பந்தாட எண்ணுவோர் — பதை பதைத்துப் பின் வாங்கிடும் வரையில் இந்தப் போர்ப்பாட்டு ஓயாது!

இந்தக் கட்டத்திலேயே எம். ஜி. ஆரின் அரசு, அவசரச் சட்டத்தைக் கைவிட்டு விடுவது தான் வரவேற்கத் தக்கதாக இருக்கும். இல்லையேல் இந்தக் கறுப்புச் சட்டம் கைவிடப்படும் வரையில் அறப்போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதானிருக்கும், அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்களாலும் எதிர்க்கப்பட்ட கறுப்புச் சட்டம், இன்னமும் பாட்டாளிகளை நோக்கிப் பாய்வதற்குத் தயாராக இருப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதன் விளைவே ஐந்து நகரங்களில் நடைபெறப் போகும் அணிவகுப்பு!

அன்புள்ள

மு.க.

தன்மான இயக்கத் தளபதியாம் அஞ்சா நெஞ்சன் கே. வி. அழகிரிசாமி அவர்களின் திருவுருவச் சிலையை கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த 29-6—78 அன்று பட்டுக் கோட்டையில் திறந்து வைத்தார்கள்.

(அழகிரி சிலைத் திறப்பு விழாத் தொடர்பான செய்திகள் - படங்கள் - அழகிரிசாமியின் வாழ்க்கை வரலாறு ஆகியவை அடுத்த இதழில் இடம்பெறும்.)

ஊமையாகிவிட்ட நியாயம்!

உலகம் ஜனநாயகத்தை நோக்கி நடைபோடவேண்டும்—இது கோடிக்கணக்கான மக்களின் ஏகோபித்த குரல்! சர்வாதிகாரம் எங்கு தலையெடுத்தாலும் அதைச்சாய்க்க வேண்டும் என்பதே முற்போக்கு எண்ணங்கொண்டோரின் முழு அவா.

சமாதானம் உலகெங்கும் தவழவேண்டும் என்பதற்காக உழைத்த உத்தமர் பண்டித ஜவகர்லால் நேரு அவருடைய அருமைப் புதல்வி இந்திரா காந்தி இந்த நாட்டிற்குத் தலைமைப் பமைச்சராக அரசியல் சந்தர்ப்பவசத்தால் ஆட்சிக்கு வந்தவர். தேர்தலில் ஊழல் செய்ததால் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என அலகாபாத் நீதிமன்றம் அளித்த தீர்ப்பே இந்திராகாந்தி ஒன்னொரு அரசியல் ஊழலைச் செய்யக்காரணமாகிவிட்டது

பதவியை தங்க வைத்துக் கொள்ள இந்திரா காந்தி எடுத்த முதல் நடவடிக்கை, நாடாளுமன்றத்தில் அரசியல் சட்டத்தைத்திருத்தமசோதா கொண்டு வந்ததே. அதன்படி குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சர். நாடாளுமன்றத் தலைவர் இவர்களுடைய தேர்தலை எதிர்த்து எவரும் வழக்கு மன்றத்திற்குச் செல்ல முடியாது.

நீதியின் குரல்வளையை நெறித்ததைக் கண்டு குடிமக்கள் கொதித்தெழுந்தனர். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இப்போக்கைக் கண்டு கண்டனம் தெரிவித்தனர்.

இட்லர் பாதையில் நடைபோட்ட இந்திரா காந்தி நாட்டு மக்களின் எதிர்ப்பு அலை எங்கே தன்னை வீழ்த்தி விடுமோ என்பதற்காக அவசர நிலையைப் பிரகடனப்படுத்தினார், இதையும் எதிர்த்து மக்கள் புயல் எப்போது வீசுமோ என அஞ்சி 'மிசா எனும் கொடுஞ் சட்டத்தைக் கொண்டு வந்தார். இவையனைத்தையும் துணிவாக எதிர்த்தார்; போர்ப்பரணி பாடினார் அன்றைய முதல்வர் கலைஞர். 'பதவி பறிபோகலாம், ஆனாலும் கவலையில்லை; பழி போட்டு கோர்ட்டுப் படியேற வைக்கப்படலாம் ஆனாலும் கவலையில்லை' நீதியின் பக்கமே நிற்பேன்! ஜனநாயகத்தைக் காத்திடசலைத்திடமாட்டேன்' என்று கலைஞர் சங்க நாதம் செய்தார்.

'சர்வாதிகார' இந்திரா காந்தி கழக ஆட்சியைக் கலைத்தார். கலைஞரைக் களங்கப் படுத்த நீதிபதி சர்க்காரியாவை நியமித்தார். குப்பைக் கூடையில் வீசி யெறியப்பட்ட பொய்ப் புகார்க் காகிதங்களை பொறுக்கி யெடுத்தார். விசாரணைக்கு ஆணையிட்டார்.

இதுமட்டுமா? நாட்டின் விடுதலைக்கு போராடிய தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டனர். கழகக் கண்மணிகள் வெங்கொடுமைச் சிறைச்சாலையிலே தள்ளப்பட்டனர் அடித்து நொறுக்கப் பட்டனர்.

நாட்டில் சர்வாதிகாரத்துக்கு முற்றுப்புள்ளிவைத்திட நாளும் குறிப்பிடப்பட்டது அதுவே தேர்தல் நாள். அது இரண்டாம் சுதந்திரப் போரின் களமாக அமைந்துவிட்டது.

அந்த அறப் போர்க்களத்தில் போர் வீரர்களாக நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்தனர். சர்வாதிகாரத்தை வெட்டிச் சாய்த்தனர்.

மலர்ந்த ஜனநாயகம் நாட்டில் மணம் வீசத் தொடங்கியது மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினர் நீதி நிலை பெறும், அதர்மம் அழியும். அதிகார ஆணவத்தால். அரசியல் வஞ்சகத்தால் அமைக்கப்பட்ட 'கமிஷன் அறிக்கைகள் திரும்பப் பெறப்படலாம் என்றெல்லாம் நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர்.

சா. கணேசன்

இந்திராகாந்தியால் அமைக்கப்பட்ட கமிஷன்—அது அளித்த அறிக்கை மீது நீதிமன்றம் பிரகாஷ்சிங் பாதல் மீது அளித்த தீர்ப்பு திரும்பப் பெறப்பட்டது, ஜனதா ஆட்சியால், அது மட்டுமல்ல, நீதிமன்றம் பாதலைக் குற்றவாளி என்று கூறியபோதிலும் அது தவறு பாதல் புனிதமானவர் என்று பாருக்கு அறிவித்து மத்திய ஆட்சியில் மந்திரி பதவி அளித்து மகிழ்ந்தது.

சோசலிஸ்ட் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்-இந்தியாவே அதிர்ந்திடத்தக்க அளவுக்கு மாபெரும் இரயில்வே தொழிலாளர் போராட்டம் நடத்தியவர் இந்தியாவின் இட்லர் இந்திராகாந்தி பரோடா வெடிகுண்டு சதி வழக்கு அவர் மீது போட்டார் அது அரசியல் வஞ்சம் தீர்க்க அநியாயமாக போடப்பட்ட வழக்கு என்று அறிவித்து ஜனதா அரசு வழக்கை திரும்பப் பெற்றது. மத்தியிலே அமைச்சர் பொறுப்பையும் கொடுத்து பெருமைப்படுத்திப் பூரிப்படைந்தது.

தேர்தல் நேரத்தில் மொரார்ஜி தேசாயும். முற்போக்குத் தலைவர் சந்திரசேகரும் முழங்கியவைகளை இந்த நாடு இன்னும் மறக்கவில்லையே.

'சர்வாதிகார அவசர நிலையை எதிர்த்து மிசா'ச் சட்டத்தை எதிர்த்து அரசியல்தலைவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து குரல் கொடுத்தார் என்பதற்காக கருணாநிதி ஆட்சியை கவிழ்த்தார்கள் அரசியல் வஞ்சம் தீர்த்திடப் பொய்ப் புகார்களை விசாரிக்க கமிஷனை நியமித்தார்கள்' என்று தேர்தல் நேரத்தில் பேசியதை திருப்பிப் படிக்க மொரார்ஜி மறந்துவிட்டாரா?

சந்திரசேகரும், ஜெகஜீவன்ராமும் சிந்திக்கக் கூடாதோ?

பாதலுக்கு ஒரு நீதி! கலைஞருக்கு ஒரு நீதியா? பெர்னாண்டசுக்கு அளித்த தீர்ப்பை கலைஞருக்கு வழங்கிட மனமில்லையே!

எந்த ஜனநாயகத்தைக் காப்பாற்ற பதவியை இழந்தாரோ பழிபாவத்தை ஏற்றுக் கொண்டாரோ, கலைஞர் அது பற்றிக் கவலைப்படவில்லை, நாட்டு மக்கள் கேட்கிறார்களே; நியாயம் எங்கே' என்று! தியாகத்திற்கு ஜனதா அளித்த தீர்ப்பு என்ன?

ஜனதா நியாயத்தை ஊமையாக்கி விட்டது! நேர்மை நிலை குலைந்து விட்டு? ஜனநாயகத்தை சந்தி சிரிக்கவைக்கிறது!

நீங்கள் படித்து விட்டீர்களா?

'நம் கலைஞர்'

(தி மு. க வார இதழ்)

ஆசிரியர்: எழில்மாறன்

6 பக்கம் — விலை 0 35 காசு

அரசியல் கட்டுரைகள், கேள்வி பதில், சினிமா பகுதி நிறைந்தது. இன்றே வாங்கி படியுங்கள்.

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு பிரதி ஒன்றுக்கு ரூ 2 வீதம் முன்பணம் கட்டக் கூடிய ஏஜெண்டுகள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி, 'நம் கலைஞர்'

4, மசூதி தெரு, பெரம்பூர் பேரக்ஸ். சென்னை-600012

குறிப்பு: அடுத்த இதழ் 5-ந் தேதி வெளிவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம். சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 44100